முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு. கருணாநிதி.

முரசு 2 | சென்னை | 15—7—55 | வெள்ளி | ஒலி 16



(2)

அவளது நினைவுகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. எதிரே மாளிகை உச்சியில் மன்னன் நின்றுகொண்டிருப்பதையும் பார்த்தாள். 'அன்றொரு நாள் இரவு, அவனது ஆசைக்கு அடங்கி இன்ப கேளிக்கையில் ஈடுபட இணங்காததால் அல்லவா, இன்றையதினம் என்னை ரண கேளிக்கை ஆடச்சொல்லி ஆணையிட்டிருக்கிறன்' என்று தனக்குத் தானே உறுமிக் கொண்டாள். தீயிலே தள்ளப்பட்டு, அதிலேயே கருகிச் சாம்பலாகி விடுவதைப் பற்றி அவள் கவலைப் படவில்லை. எத்தனையோ அழகிகள்-உலக சரித்திரத்தை மாற்றி எழுதவந்த 'கிளியோபாடரா'க்கள்--உல்லாசப் பன்னீர் ஓடையிலே தங்கள் உடலைக் குளிப்பாட்டி சந்தன மணங் கமழும் சரீரம் படைத்தவர்கள் என்று சல்லாப சுந்தரர்களிடம் விருது பெற்ற சரசாங்கிகள் - அவர்கள் எல்லோருமே தீ நாக்குகளால தடவிக் கொடுக்கப்பட்டு பஸ்பமாகப் போனவர்கள்தான்! ஒரே ஒரு வித்தியாசம்; அவர்களில் பலரின் உடல்கள் ஜில்லிட்டுப் போன பிறகுதான் நெருப்புக்கு இரையாக்கப்பட்டன. இவளுக்கோ, ரத்தத்திலே சூடு தணியாமலிருக்கும்போதே 'தணல் வீழ் தண்டனை' அளிக்கப்பட்டு விட்டது. உயிரோடு தீ புகுவதுகூட ஆச்சரியமில்லை; புதுமையான செய்தியுமல்லதான்! தீக் குளித்த ராஜகுமாரிகளை ராஜபுதனத்து சரித்திரம் பட்டியல் போட்டுக் காட்டுகிறது.

ஆகவே, தீயிலே புரண்டு உயிர் விடுவதைப்பற்றி அந்த உயிர்ச்சிலையாள் வருந்தவில்லை. தீயிலே புரண்டாலும், உயிர் போக அனுமதிக்க மாட்டார்களாமே; உடனே தூக்கி நிறுத்தி, ரணங்களிலே மிளகாய்த்தூள் தூவுவார்களாமே; எரிச்சல் தாங்காமல் குதிப்பதை, கோமேதகத்தின் குதூகல நடனம் எனக் கூறி மத்தள தாளம் தட்டி, மன்னனும் மற்றவரும் கெக்கலிப்புக் கொட்டுவார்களாமே; அய்யோ— இவைகளை அவளால் நினைக்கவே முடியவில்லை! தீயிலே தள்ளியதும் உடுத்தியிருக்கும் ஆடையிலே பாதிக்குமேல், ஏன முழுவதுமேகூட எரிந்து விடலாம்—அரை உயிராகத் தன்னை வெளியே எடுத்து ஆடச்சொல்லி, எரிச்சல் தூள் தூவும்போது ஒருவேளை நிர்வாணக் கோலத்திலேகூட நிற்க நேரிடலாம் — அய்யோ; அந்த நிர்வாணப் பிணத்தை நடு வீதியிலே ஒரு மேடையிலே தொங்கவிட்டு வேடிக்கைக் காட்டுவார்களாம்; வீதியிலே போவார் வருவோருக்கு, அப்பப்பா! எப்படித் தாங்குவேன் இந்த சித்திரவதையை! ஏ! நெருப்பு ஜுவாலையே! என்னை உன் வாயில் தள்ளியதும் உடனே விழுங்கி ஜீரணித்து விடு! — என்னுடைய ஒரு எலும்புகூட விடாமல் பொடியாகப் புசித்துவிடு!—என்றெல்லாம் மனதுக்குள் புலம்பிக் கொண்டிருந்தாள், கோமேதகம்!

''துறவியைக் கெடுத்தேனும் துறவியை! அப்படியே இருக்

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்

ரஞ்சித்சிங் முதல்—தாராசிங் வரை!

ஜூலை மாதம் நமக்கு மட்டுமல்ல; பாஸ்டிலியை உடைத்த பிரான்சுக்கு மட்டுமல்ல; பஞ்சாப் மாநிலத்திற்கும் 'பிரியமான' மாதம்!

மொழி வழி மாநிலம் கேட்டு அவர்கள் ஊதுகிற கொம்பு வெளிநாடுகளிலே நேருவுக்குக் கிடைக்கும் 'ராஜோபசாரங்'களையும் கேள்வி கேட்கத் தூண்டுகிற அளவுக்கு ஓங்கி ஒலிக்கிறது!

இதுவரை நாலாயிரத்துக்கு மேற்பட்ட 'அகாலி' இயக்கத் தொண்டர்கள் சிறையிலிருக்கிறார்கள்! அவர்கள் தலைவராம் தாராசிங் கூட, கட்டளைகள் வழங்கமுடியாத நிலையிலே காராக்கிரகத்தில் பூட்டப்பட்டிருக்கிறார்!

ஜூலை 5-ந் தேதியன்று அவர்களுடைய போராட்டம் ஒரு உச்ச கட்டத்தை அடைந்திருக்கிறது. அகாலியரின் பிரச்சாரப் பத்திரிகைகளான 'டெய்லி பிரபாத்'—'டெய்லி அகாலி'—'டெய்லி அஜித்' — 'அகாலி பத்ரிகா' போன்றவைகளின் காரியாலயங்கள் போலீசாரால் சோதனையிடப்பட்டு, 'சீல்' வைக்கப் பட்டுவிட்டன!

இந்தப் போரிலே வெற்றி கிட்டியதும், அகாலியர்களும் நம்மைப்போல வெற்றி விழா கொண்டாடுவார்கள்! மார்வாரி ஏகாதிபத்யத்தை முறியடித்துவிட்டதாக முழக்குவார்கள்! அந்த வெற்றி விழாவும் அநேகமாக போராட்டம் உக்ர நிலையடைந்திருக்கும் ஜூலை மாதத்திலேயே அமையலாம்—எனவேதான் அவர்கள் நடந்துவந்த பாதையையும், வீர வரலாற்றையும் இந்தக் கட்டுரையில் படம் பிடித்துத் தந்திருக்கிறோம்!

'காரவன்'—'இல்லஸ்டிரேட்டட் வீக்லி' போன்ற பத்திரிகைகளில் வந்த சில கட்டுரைகளே இதன் ஆதாரம்!

சங்க காலத் தமிழகம்போல பஞ்சாப் போர் வீரர் மலிந்த மாநிலம்—வாளொடு வாழ்ந்து, பகைவனின் தாள் பணியாப் பரம்பரையினர் அங்கே ஏராளமாக இருக்கின்றனர்!

சீக்கியர்கள் என்ற பெயரும், அந்தப் பெயருள்ள மதமும் உன்னத இலட்சியங்கள் கொண்டதாகத்தான் ஆதியில் மலர்ந்தது. ஆனால் இடையில் வந்த முகலாயர்கள் அவர்களுக்குச் செய்யக் கூடாத கொடுமைகளையெல்லாம் செய்து, நல்வழி நூல்கள் இருந்த அவர்கள் கைகளிலே கூர் வேலையும், பகைக் கருவி தடுக்கும் கேடயத்தையும் கொடுத்துவிட்டார்கள். மதவெறி பிடித்த ஔரங்கசீப், அவர்களுடைய தலைவர்களில் ஒருவராம் தேக் ஹாதரைப் பிடித்து முஸ்லிம் ஆகும்படி வற்புறுத்தினார். தேக் பஹாதர் கொள்கையை விட்டுக் கொடுக்கும் கோழையல்ல! எனவே சக்கரவர்த்தியின் விபரீத விருப்பத்துக்கு இணங்க மறுத்தார். சிறைவாசமும், சித்ரவதையும் பரிசாகக் கிடைத்தன. இறுதியில் சிந்தனைகளின் விளை நிலமாய் விளங்கிய அவரது சிரசும் ஔரங்கசீப்பால் வாழைத் தண்டைப் போல சீவி யெறியப்பட்டது.

தேக் பஹாதருக்குப் பின் வந்த சீக்கியர்களின் தலைவர்கள், மொகலாயர்களின் மூர்க்கத் தனத்தைச் சமாளிப்பதற்காக தங்கள் கூட்டத்தாரைப் போர் வீரர்களாக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மழலையுரை பேசும் மாணிக்கங்கள்கூட ஈட்டி எறியும் வித்தகனாக விளங்கினார்கள்!

அத்தகைய வீரர் வழிவந்தோர் தான் சீக்கிய சிங்கங்கள்! அவர்களின் அபிமானத்துக்குரிய சக்ரவர்த்திதான் ரஞ்சித சிங்!

சரிதம் படித்தவர்களுக்குத் தெரியும், ஒற்றைக் கண்ணனான ரஞ்சித் சிங் ஒரு சாதாரண மாநிலத்தின் கவர்னராயிருந்து, பின் எப்படி ஒரு சீக்கிய சாம்ராஜ்யத்தையே சிருஷ்டித்தான் என்கிற வீரக் கதை. அவனைக் கண்டு ஆங்கிலேயர்கள் நடுங்கினார்கள். அவன் வெற்றிச் செய்தி ஒவ்வொன்றும் அவர்களுக்கு அதிர் வேட்டாய்—அபாய அறிவிப்பாய் இருந்தது!

ரஞ்சித் ஆப்கானியரிடமிருந்து வடக்கே காஷ்மீரத்தையும், தெற்கே மூலஸ்தானத்தையும் கைக்கொண்டான். ஆனால், அவன் சைன்யத்தில் ஒரு பகுதியை ஆங்கிலேயர் மீது திருப்பியிருந்தானேயானால், வெள்ளை ஏகாதிபத்யம் தன் ஆணிவேர் இந்திய மண்ணிலே பரவாததற்கு முன்பே பொடி சாம்பலாகப் போயிருக்கும். என்ன காரணமோ ரஞ்சித் பேசாமலிருந்து விட்டான். அவன் மனோ நிலையறியாத ஆங்கிலேயர் கூட அவனுக்குப் பயந்து கொண்டு ஒரு நேச உடன்படிக்கை செய்து கொண்டனர்.

பஞ்சாபின் சிங்கமென்று விருது பெற்றான் ரஞ்சித்; ஆனால் இடியெனக்கும் கர்ஜி அந்தச் சிங்கம், ஆங்கில நாயைக் கண்டு பல்லை இளித்ததுதான் சரித்திரப் பேராசிரியர்களுக்கே ஒரு விசித்திரமாய் இருக்கிறது!

ஆனால் அவனுக்குப் பின் வந்த பஞ்சாப் மாநிலத்தவர் அப்படியிருக்கவில்லை. வெள்ளையனின் பீரங்கி முழக்கத்திடையே சுதந்தர முழக்கத்தையும் காற்றிலே கலக்கவிட்டுத்தான் தங்கள் கண்களை மூடிவிட்டிருக்கின்றனர்.

சக்கரவர்த்தி மரித்த பின்பு அவன் கட்டியாண்ட சாம்ராஜ்யம் சிதருண்டது. அந்தச் 'சிதறலை'ப் பயன்படுத்திக் கொண்டு வெள்ளையர் பஞ்சாபை தங்கள் உடமையாக்கிக் கொண்டனர்!

இந்த நிகழ்ச்சிக்குப் பின் பஞ்சாபிலே பல்லாயிரம் ரஞ்சித் சிங்குகள் தங்கள் இரத்தத்தைக் கொடுத்தாவது தாயகத்தை அடிமைப்படுத்தியிருக்கும் வெள்ளையரை விரட்டுவதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டு, கையிலே கிடைத்த ஆயுதங்களையும், மனதிலே உதித்த எண்ணங்களையும், செயல்படுத்த களத்திலே குதித்தனர்!

1872-ம் ஆண்டு சீக்கிய மதத்திலேயே ஒரு பிரிவினரான குகாக்கள் ஆங்கில ஆட்சியை எதிர்த்து புரட்சி செய்ய ஆரம்பித்தனர். "ஆங்கிலேயர் நியமித்துள்ள நீதி மன்றங்களிலே நீதி இல்லை—எங்களுக்கு நீதி வழங்க அவர்களுக்குத் தகுதியும் இல்லை" என்று முழங்கி போர் முரசம் தட்டினார்கள். ரஞ்சித் சிங்குடைய படையிலே சிப்பாயாகப் பணிபுரிந்த பாய் ராம் சிங் என்பவரே இந்தக் கிளர்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

அதே ஆண்டில் மாலேர்க்கோட்லா என்னும் சமஸ்தானத்தை ஒரு கிளர்ச்சிக்காரர்கள் அணி வகுப்பு சூழ்ந்து கொண்டு கடுமையாகத் தாக்கியது. ஆனால் வெற்றி இவர்கள் பக்கமில்லாமல் ஆங்கிலேயர் பக்கத்துக்குப் பறந்து விட்டது.

இது சம்மந்தமாக அறுபத்தி ஆறு குகாக்கள் பீரங்கி வாயிலிலே நிறுத்தி வைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள்.

விசாரணை ஏதுமின்றி அந்த வீரர்களின் உடல்களை காக்கைக்கும், கழுகுக்கும் இரையாக்கிய அந்த ஆங்கிலேயனின் பெயர் கோவான் என்பது. அவன் அப்போது லூதியானா ஜில்லாவுக்கு ஒரு மாஜிஸ்திரேட்! அவனுக்குத்தான் அந்த நாளிலே அவ்வளவு அதிகாரம் இருந்தது.

ஆங்கில ஆட்சியை எதிர்த்து தனிப்பட்டோரின் எதிர்ப்பு பஞ்சாபிலே பரவிவரும் இந்த வேளையிலேதான் வங்கத்திலே சுரேந்திரநாத் பானர்ஜி ஒரு அகில இந்திய அமைப்பு அரும்ப வேண்டிய சூழ்நிலைகளை உணர்ந்து, திட்டங்களை உருவாக்கி வந்தார். வடநாடு முழுதும் சூறாவளி வேகத்திலே சுற்றுப் பயணம் நடத்தி, லாகூரிலே 'இந்தியர்கள் சங்க'த்திற்கு வித்திட்டார். "இதுதான் பஞ்சாபிலே முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட அரசியல் ஸ்தாபனம்" என்று பானர்ஜி தன்னுடைய சுயசரிதையிலே பொறித்திருக்கிறார். அவருடைய இடைவிடாத தூண்டுதலால் சர்தார் தயால் சிங் என்பவர், சிங்கத்தை அதன் குகையிலேயே சென்று எதிர்ப்பதைப் போல 'டிரிப்யூன்' என்னும் தாள் ஒன்றை ஆங்கிலத்திலேயே துவக்கினார். அப்போதெல்லாம் சுதந்தரச் சூரியனாக இருந்த காங்கிரஸ் கட்சி, தன்னுடைய முதல் மாநாட்டைப் பம்பாயிலே துவக்கிய போது, 'டிரிபியூனி'ன் ஆசிரியர்தான் பஞ்சாபின் பிரதிநிதியாக மாநாட்டு நடவடிக்கைகளிலே கலந்து கொண்டார்.

காங்கிரஸ் துவங்கி ஓரிரண்டு ஆண்டுகளிலேயே பஞ்சாப் அதன் கோட்டையாகிவிட்டது. முன்பே பஞ்சாபியர்கள் வெடிமருந்தைப் போல! விடுதலைப் பொறி அதில் தெறித்து விழுந்ததும் அடிமைக் கோட்டை தூள் தூளாக நொறுங்க ஆரம்பித்தது. ஒரே ஆண்டில் பஞ்சாபில் மட்டும் சுமார் ஆறுயிரம் தோழர்கள் மீது பீதி கொண்ட ஆங்கில அரசாங்கம் நன்னடத்தை ஜாமீன் கட்டும்படி உத்தரவு போட்டதாம்.

அப்போதெல்லாம் வெளி நாட்டிலே ஒரு கட்சிக்கு செல்வாக்கு இருப்பதென்பது அபூர்வமானச் செயலாகும்! பர்மாவிலிருந்தும், இந்தோனேஷியத் தீவுகளிலிருந்தும் நம்முடைய மாநாடுகளுக்குப் பிரதிநிதிகள் வரும்போது நாம் அடையும் பெருமையும், பூரிப்பும் அந்தக் காலத்து காங்கிரஸ்காரர்களையும் ஆட்கொண்டிருந்தது.

பஞ்சாப் வாசியான முர்ளிதர் என்பவர், இங்கிலாந்திலிருந்து ஐநூற்று ஐம்பத்திஐந்துருபாய்களை நிதியாகச் சேர்த்து அலகாபாத் மாநாட்டின்போது அளித்தாராம். சென்ற மாநில மாநாட்டின்போது ஜப்பானிலிருந்து சில தோழர்கள் சிறு தொகையை நிதியாக அனுப்பியிருந்தபோது எப்படிப் புளகாங்கிதம் கொண்டோமோ, அதே நிலை அன்று அலகாபாத் மாநாட்டிலே நடமாடியதாம்! வெளிநாட்டிலே பிரச்சாரம் செய்வதற்குக்கூட பஞ்சாபியர் போட்டி போட்டுக் கொண்டு முன் வந்திருக்கிறார்கள்!

★

அது இருபதாம் நூற்றுண்டின் துவக்க காலம்! ஆங்கிலேயரை எதிர்த்து பலாத்கார முறை லேசாக எங்கும் முளைகட்டி வந்தது. பிறவியிலேயே போர் வீரர்களாய்—தீட்டிய வாளும், தினவு கொண்ட தோளும் கொண்டு உலவும் பஞ்சாபியர்கள், பலாத்கார முறையைக் கையாள்வதிலும் தன்னிகரற்றவர்களாய் தங்களைத் தியாகம் செய்துகொண்டார்கள்!

இங்கிலாந்திலேயுள்ள சிலரால் கருவுதித்த பலாத்காரமுறை, பஞ்சாபைத் தகுந்த இடமாகக் கொண்டு தழைத்தது. மதன்லால் டிங்ரா என்பவர், லண்டன் மாநகரில் 'இம்பீரியல் இன்ஸ்ட்டிடியூட்'டைச் சேர்ந்த கூட்டமொன்றில் கலந்துகொண்ட சர் வில்லியம் கர்சான் வைலி என்னும் இங்

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 15—7—55 வெள்ளி

புதைகுழி தேடாதீர்!

இந்தி மொழியைத் திணித்து, இதர மொழிகளின் தொண்டைக் குழியை நெறிக்க டில்லி அரசினர் திட்டம் தீட்டி விட்டார்கள். மூன்று அம்சத் திட்டமாம்! முதல் கட்டத்தில் எல்லாப் பள்ளிகளிலும் இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவார்களாம்! அதற்குள்ளாகவே விஞ்ஞான தொழிற் நுணுக்கச் சொற்களை தயாரிப்பார்களாம்! இரண்டாவது கட்டத்துக்குள் பரத கண்டமெங்கும் இந்தி மொழி பரவி விடுமாகையால், மூன்றாவது கட்டத்தின்போது ஆங்கிலத்தின் நிலையை இந்தி அடைந்து விடுமாம்! பின்னர், மாகாணங்களோடு டெல்லிக்கு இருக்கும் கடிதப் போக்குவரத்துகள்கூட இந்தியிலேயே கையாளப்படுமாம்!

—இப்படி பெருமிதத்தோடு அறிவிக்கிறார்கள், பிரதேச மொழிக்காரர்களின் பெருமைக்குக் குழி பறிக்கும் இந்தி வெறியர்கள்!

வெல்லம் நிகர் வங்கம்; அதிலே வேம்பு நிகர் இந்தியைத் தடவப் போகிறார்கள்!

மழலையென மனமகிழ்வு தரும் மலையாளம்—அதை மந்தியின் கையிலே ஒப்படைக்கப் போகிறார்கள்!

தங்கச் சுரங்கமாம், சுந்தரத் தெலுங்கு—அதைத் தூர்த்து விடத் திட்டம் தயாராகி விட்டது, டெல்லியில்!

கலையும், கவினுமற்ற இந்தி, கரும்பன்ன கன்னடத்தை ஆளப் போகிறது!

—வேற்று மொழிக்காரர்களின் விழியிலே வேல் சொருகும் பணி வேகமாக நடைபெறுகிறது.

ஆந்திரமும், மலையாளமும் ஆபத்தை உணராமல் சாகசக்காரர்களின் சதியிலே சாய்ந்து விட்டது. இனி தமிழகம் ஒன்றுதான் இருக்கிறது—இங்கும் இந்தியைத் திணித்து விட்டால் 'ஏக மொழிப் பித்தர்'களின் முதல் கட்டம் முற்றுப் பெற்று விடும்!

நாம் முன்பே குறிப்பிட்டிருக்கிறோம், இந்தி தென்னகத்திலே திணிக்கப்படும் அந்த நாள்தான் திராவிட நாட்டுப் பிரிவினை நாள் என்று! அந்த 'நாளை' நம்மிடம் நெருங்க வைக்கிறார்கள், கருங்கல் நெஞ்சம் கொண்ட இந்தி மொழிப் பித்தர்கள்!

மூவர் வளர்த்தத் தமிழை மூளியாக்கப் போகிறார்கள். முடி தரித்து, முரசு கொட்டி வாழ்ந்த மொழியை, 'மூலையில் கிடந்தது' முறியடிக்கப் போகிறது!

—இந்த நேர்மையற்ற செயலை நம்மால் ஒரு முறைகூட நினைத்துப் பார்க்க முடியவில்லை—நெஞ்சு குழைகிறது!

இதையெல்லாம் கவனிக்க நேரமில்லாமல் காரியமாற்றக் கிளம்பி விட்டார்கள், கள்ளத்தால் இந்திக்குப் பட்டாபிஷேகம் செய்ய நினைக்கும் எத்தர்கள்!

பிரதேச மொழிகளை பிரேதமாக்கிவிட்டு, அந்தப் பிணவாடையிலே இந்திக்கும், இந்திய அரசுக்கும் மாலை மாற்ற நினைக்கும் அந்த மோசக்காரர்களுக்கு, முழு நிலவு போல் கிழக்கு வங்காளம் சிகப்புக் கொடி காட்டி நிற்கிறது!

நான்கு ஆண்டுகளுக்கு முன்னே பீடு நடை போட்டு, ஈடு இணை இல்லை என்று திரிந்த முஸ்லிம் லீகினர், உருது மொழிக்கு விருதுகள் பலசூட்டி வங்கமொழி பேசுவோரின் குருதி கொப்பளிக்கச் செய்தனர். அதன் விளைவு என்ன? வளைவுப் பிறைகொண்ட கொடியினர் இன்று வளைந்தே போய் விட்டார்கள்.

பாகிஸ்தானத்து அரசியல் நிர்ணய சபையிலே கிழக்கு வங்கத்தின் பேராதரவு கொண்ட ஐக்ய முன்னணி வியத்தகு வெற்றி குவித்திருக்கிறது. உருது மொழி ஆதிக்கத்தின் மெருகு கலையாச் சின்னமாக இருந்த முஸ்லிம் லீக் மன்றமேறி பேச முடியாத நிலை! வேற்று மொழித் திணிப்பால் பேடகன்ற அன்றிலைப் போல் வாடியிருந்த கீழ் வங்கம் இன்று களிப்புக் கடலாடிக் கொண்டிருக்கிறது!

வெற்றிப் பெண்ணை கரத்திலே அணைத்துக் கொண்டிருப்போர்கள் இப்போது அங்கே மொழிக் கொள்கையையே மாற்றி விட்டார்கள். 'கல்வி திட்டப் புனருத்தாரண கமிட்டி'யொன்றை கீழ்வங்கம் நியமித்தது. நம்மை நாயினும் கீழாய் நினைத்து இந்திக்கு எடுபிடியாய் இருப்போர் அந்தக் கமிட்டியின் கண் போன்ற முடிவுகளை ஒரு முறை படிக்க வேண்டுகிறோம்.

"தன்னுடைய தாய்மொழியைத் தவிர பிறிதொரு மொழியைப் பயிலும்படி சிறுவர்களைக் கட்டாயப் படுத்தக் கூடாது".

—பிறைக் கொடியும், மொழியைப் பொறுத்த வரையிலே குறை மதியும் கொண்டோருக்கு கீழ் வங்கத்தின் கல்விக் குழு விடுத்த அறைகூவல் இதுதான்!

தோல்வியைத் தழுவியிருக்கும் முஸ்லிம் லீகினரைக் கொண்ட பாகிஸ்தான் அரசாங்கமும் வெட்கமில்லாமல் அந்த முடிவை ஏற்றுக் கொண்டு, வங்க மொழி பேசும் மாணவர்மீது கட்டாயமாகத் திணித்திருந்த உருது மொழியை 'வாபஸ்' பெற்றுவிட்டது!—அல்ல; அல்ல; 'வாபஸ்' பெறும் நிலைமையை ஏற்படுத்தி விட்டார்கள், போதுமக்கள்!

அரசியல் நிர்ணய சபையிலே, ஆதரவு இல்லையாம்! முஸ்லிம் லீக் முகாரி பாடுகிறது!

அடுத்த தேர்தல் காலத்திலே தென்னகத்திலே அது போன்ற ஒரு நிலைமையை—அரசியல் அநாதைகளாகும் ஒரு சந்தர்ப்பத்தைத், தங்களை அறியாமலேயே இந்தி வெறியர்கள் தேசியப் போர்வையிலே செய்து வருகிறார்கள்!

அமுக்கப்பட்ட மொழிகளின் சார்பாக ஆளவந்தாரை எச்சரிக்கிறோம்—நாளை நடக்கப் போகும் நிகழ்ச்சியை முன் கூட்டியே அறிவிக்கிறோம்;-வேண்டாத மொழியைத் திணித்து புதைகுழியைத் தோண்டிக் கொள்ளாதீர்!

நீங்கள் தீட்டியிருக்கும் மூன்று அம்சத் திட்டம் இந்தி மொழித் திணிப்புக்காக அல்ல; தென்னகத்தைப் பொறுத்த வரையில் உங்கள் இறுதிச் சடங்குகளுக்குத்தான்!

முதற் கட்டத்திலே துவண்டு போன தமிழகத்து மக்கள் மனதிலே தீ மூட்டுகிறீர்கள். இரண்டாவது கட்டத்திலே இலட்சியப் பிழம்பாய் வான்தழுவ வளர்ந்திருக்கும் அந்தத் தீ மூன்றாவது கட்டத்திலே உங்கள் ஏகாதிபத்யத்தை விழுங்கி ஏப்பமிட்டுவிடும்.

—தென்னாட்டவரின் மொழி ஆர்வக் கடலிலே ஆழந்தெரியாமல் காலை விட்டிருக்கும் ஆளவந்தாருக்கு இதைத்தான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறோம்!

புதிய 'துக்ளக்குகள்'!

முன் யோசனையற்ற செயலுக்கு முகமது துக்ளக்கை உவமை சொல்வார்கள்!

—அதைப் பழைய உதாரணமாக்கிவிட்டது, இந்திய அரசின் ரெயில்வே இலாக்கா!

ஏராளமான பொருட் செலவில் புகை வண்டிகளிலே உள்ள முதல் வகுப்புகளை ஒழித்துவிட்டு 'இண்டர்' வகுப்பைத் திணித்தார்கள்.

பின்னர் ஒரு நாள் திடீரென்று முதல் வகுப்பை ஏற்படுத்தி, 'இண்டர்' வகுப்புக்கு இரண்டாம் வகுப்பென்று பெயர் சூட்டினார்கள்!

கோடி கோடியாக ரூபாய்களைக் கொட்டி ரெயில்வேக்களில் புதிய பிராந்தியங்களை சிருஷ்டித்தார்கள்.

இந்தத் திட்டம் அமுலாக்கப் படுவதற்கு முன்னரே, 'பிராந்தியங்களை பெரிய அளவில் அமைக்கிறீர்களே; அது சரி வர இயங்குமா?' என்ற கூக்குரல் நாடெங்கும் கேட்டது.

அப்போது அதை அலட்சியப் படுத்தினார்கள்! இப்போது ஆசார்ய கிருபளானி தலைமையில் அமைக்கப்பட்ட 'ரெயில்வே லஞ்ச ஒழிப்புக் கமிட்டி'யோ, "புதிய பிராந்தியப் பிரிவுகள் சரிவர இயங்கவில்லை. அவை இலஞ்சத்தின் விளை நிலமாக இருக்கின்றன"—என்று ஆணித்தரமாக எடுத்துச் சொல்லியிருக்கிறது.

அது மட்டுமா? 'அஸ்ஸாம் லிங்க்' என்ற பெயரிலே வடக்கே ஒரு பெரிய இருப்புப் பாதையைப் போட்டார்கள். இந்திய நாட்டு இஞ்சினீயத் திறமைக்கு இதுவே எடுத்துக் காட்டு என்று முழக்கினார்கள்.

அதன் உண்மை இப்போதுதான் வெளிவந்திருக்கிறது.

அந்த அஸ்ஸாம் ரெயில்வே ஒரு நாள்கூட லாபகரமாக இயங்கவில்லையாம்.

ஒரு சிறு வெள்ளத்தைக்கூட தாங்கி நிற்கும் சக்தி அந்த இருப்புப் பாதைக்குக் கிடையாதாம்!

'ஏன்' என்று காரணம் கேட்டால் பதில் வருகிறது—'அவசரம், அவசரமாக அந்தப் பாதையை அமைத்தோம்' என்று!

—இதுபோன்ற வேடிக்கையான செயல்களுக்குத்தான் நம்முடைய வரிப்பணம் விரயமாகிறது! இப்படியெல்லாம் புது உவமைகளை உருவாக்கும் 'துக்ளக்'குகள் கையில்தான் இந்த நாடு சிக்கியிருக்கிறது!

நாட்டிய கலா....

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

கட்டுமே; அது ஒரு குற்றம்; அதற்கு இவ்வளவு பெரிய தண்டனை என்று யார் வகுத்தது சட்டம்? ''—அவள் இதயத்திலே கேள்வி அம்புகள் பாய்ந்து கொண்டிருந்தன!

கேள்வி அம்புகளை விடக் கடுமையாக, இறந்த கால இன்ப நினைவுகள் என்னும் விஷந் தடவப் பட்ட வேல்கள் மள மளவென்று பாய்ந்து கொண்டிருந்தன அவளது மென்மையான இருதயச் சுவர்களிலே! இன்ப நினைவுகள் தான்—ஆமாம்; அந்த இளந்துறவியின் பிரவேசத்திற்குப் பிறகு அவள் வாழ்விலே ஏற்பட்ட இன்பத் திருப்பத்தைப் பற்றிய இன்ப நினைவுகள்தான் !

★

அந்த முதல் நாள் சந்திப்பு—ஆம்; அந்த இளந்துறவிக்கும் அவளுக்கும் ஏற்பட்ட சந்திப்பு-இப்படியெல்லாம் 'விசுவரூபம்' எடுக்கும் என்று அவளுக்குத் தெரியாது. எத்தனையோ அதிதிகள் அவள் வீட்டுக்கு வருவார்கள்; உபசரித்திருக்கிறள். ஒருநாள், இரண்டு நாள் தங்குவார்கள். உலக பந்தங்களிலேயிருந்து அறுபடும் விதம் பற்றி உபதேசங்கள் புரிவார்கள். உற்சாகத்தோடு கேட்பாள்-மரியாதையோடு அவர்களை வழி அனுப்புவாள். 'எளிய வாழ்க்கையிலே எத்துணை இன்பம் இருக்கிறது' என்று தனக்குத்தானே எண்ணிப் பூரிப்படைவாள். மணிமேகலை போல ஒரு அட்சய பாத்திரத்தோடு, தானும் வெளியே கிளம்பிவிட்டால் என்ன; என்று யோசிப்பாள். மாதவியின் குல விளக்கு—மணிமேகலையையும் இப்படித்தான் உதயகுமாரன் என்னும் அரசகுமாரன் வட்ட மிட்டான். அதற்குப் பயந்து அவள் ஓடினுள். ஓடியவள், உலகு போற்றும் மணிமேகலையானுள். அதுபோல ஏன் தானும் ஒரு மணிமேகலையாகக்கூடாது என்ற எண்ணம் நாளுக்கு நாள் வளரத் தலைப்பட்டது. நடன கலாராணியின் மகள் மணிமேகலை ஒரு காவியமானுள்—தானும் ஒரு நாட்டிய கலாராணி தானே; நாட்டிலே தானும் ஒரு மங்கையர் திலகமாக மாற முடியாதா என்ன? இந்தக் கேள்வியின் கூர்மை மழுங்கிடும் விதத்திலே தான் அந்த இளந்துறவியின் சந்திப்பு ஏற்பட்டது அவளுக்கு!

ஊர் கிண்டல் (2)

இவர் தூணாயில் வசிக்கிறர்.

எல்லா அதிதிகளையும் வரவேற்பது போலவே கோமேதகம் அவனையும் வரவேற்றுள். உபசரித்தாள். ஆனுல் எல்லாத் துறவிகளையும்விட இவனிடத்திலே அவளுக்கு மதிப்பு அதிகமாயிற்று. காரணம்; அவள் கண்ட மற்றத் துறவிகள் எல்லாம் ஏறத்தாழ நாற்பது ஐம்பது ஆண்டுகளைக் கடந்தவர்கள். இவனே பருவ இளைஞன்-நிலாவைக் கண்டு நெஞ்சு நெகிழ்கிற பருவம்-தென்றலின் மென்மையான மோது தலைக்கூட தாங்க மாட்டாமல் மயங்கிவிழும் வயது-ஜோடிப் புரு கண்டு கோடி கோடி எண்ணங்களைக் கொட்டுகின்ற கட்டிளமை!

அஜந்தா ஓவியங்களை ஏட்டிலே பார்த்து அயர்ந்திடும் கட்டம்—தழுவிடும் வடிவுள்ள சிலைகள், தணலிடு மெழுகென அவனை உருக வைக்கும் கலைகள்!

''புதுமலர் சுவைக்கும் பொன் வண்டே!'' என யாராவது பாடக் கேட்டாலே, போதை தலைக்கேறும் பருவம்! அத்தகைய எழுச்சிமிக்க இளமையைத் தத்தம் செய்துவிட்டு, துறவியாக மாறிவிட்டானே என்ற எண்ணம், கோமேதகத்திற்கு அவன்பால் அதிக மரியாதையை அளித்தது. கனி வகைகள் தந்து களைப்பாற வேண்டினுள். உண்டான். சிறிது உறங்கினுன். அன்றைய பொழுது கழிந்தது.

★

மறுநாள் காலையிலே, கோமேதகம் துறவியிடம் பேச்சுக் கொடுத்தாள்.

''துறவு நிலை என்றுல் என்ன?'' என்பது பற்றி அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினுன் துறவி. அத்தனையும் கற்கண்டு என துள்ளிக் குதித்தாள் கோமேதகம்—அரும்பு வயது!-கரும்பு மொழிகள்!—ஆகாகா! இவரன்றே உலகுணர்ந்த ஞானி!—எனப் பெருமை கொண்டாள்.

மறுநாள், ''உலகம் நிலையாமை எப்படி?'' என்று உபதேசம் புரிந்தான் துறவி.

''இன்றுகாண்பது நாளை இல்லை! நீள் வைய வாழ்வு, நீர்மேல்குமிழி நிற்பதற்கு ஒரு அடி நீள பூமி—கடைசியில் பிணமாகப் படுப்பதற்கு ஆறு அடி நீள பூமி-இது தான் மனிதனுக்கு சொந்தம்! இல்லை; அதுகூட இல்லை; அவன் நின்ற இடத்திலே இன்னெருவன் நிற்கிறன்-பிறகு வேறெருவன் நிற்கிறன். அதுபோல அவன் இறுதிப் படுக்கை விரித்த இடத்திலே கூட, அவன் மண்ணேடு மக்கிய பிறகு, வேறெருவன் பாய் போட்டுக் கொள்கிறன். இதற்குள்ளே சொந்தம்-பந்தம்-சுருட்டல்-உருட்டல்-மிரட்டல்-அப்பப்பா-முட்டாள் மனிதன்—முட்டாள் மனிதன்!''

—துறவியின் முடிவுரை கேட்டு கோமேதகம் அசைவற்றுப் போனுள். அவ்வளவு உருக்கமான உபதேசமாக இருந்தது அது!

''உபதேசங்கூட ஒரு கலைதான்! எல்லோரும் உபதேசம் செய்து விட முடியாது! தாங்கள் கூறிய இதே தத்துவத்தை வரட்டுத் தனமாக எத்தனையோ பேர் கூறுகிறர்கள்; அது மனதைக் கவரவில்லை! தாங்களோ உள்ளமுருக்கும் விதத்திலே உபதேசிக்கிறீர்கள்'' என்று புகழ் மாலை சூட்டினுள் கோமேதகம்.

''கலை என்றுல் என்ன?'' என்பது பற்றி மறுநாள் சொற்பொழிவு நிகழ்த்தினுர் துறவி. அன்றைய தினம்வெறும் சொற்பொழிவோடு முடியவில்லை.

பல நாட்களாக நின்று போயிருந்த கோமேதகத்தின் நாட்டியமும் நடைபெற்றது. அதற்குக் காரணம், துறவியின் 'கலை' பற்றிய பிரசங்கம்தான்!

''கலை கடவுள் அளித்த வரப்பிரசாதம். அந்த சக்தி உலகத்திலே ஜனனமாகும் அனைவருக்கும் ஏற்படுவதில்லை ! கோமேதகங்கள் எல்லா வீட்டிலும் பிறந்து விட முடியாது! சிலர்தான் கோமேதகங்களாக இருக்க முடியும். அந்த சிலரிடம், சிருஷ்டி காலத்திலே அமையும் கலைத் திறமையை யாருக்கும் பயனின்றி அழித்து விடுவது தகாது! ஆகவே நீ உன் கலைத் திறமையை பாழாக்காதே! ஆடு; நான் காண்கிறேன்! என் ஆத்ம திருப்தி—உனக்குக் கலைத்திறமை அளித்த ஆண்டவனுக்குத் திருப்தி ஏற்படுத்தும்''

கோமேதகம் ஆடினுள். முதல் நாள் மௌனமாக இருந்து துறவி ரசித்தான்.

மறுநாள் அவள் ஆடும்போது பாடினுன். உபதேசங்களும் நடந்து கொண்டேயிருந்தன.

'உலகம் நிலையாமை' என்ற பொருளையொட்டி, அந்த 'நிலையில்லா உலகத்திலே வாழ்வது எப்படி?' என்று துறவி ஒரு நாள் பிரசங்கம் செய்தான்.

''உலகம் அழிவது உண்மை தான்! நாளை நாம் இருக்க மாட்டோம் என்பதும் உண்மை தான்! அதற்காக; இன்றைக்கு அனுபவிக்க வேண்டியதை இழந்து தவிக்க வேண்டுமா?''

இப்படி ஒரு கேள்வி கேட்டான் துறவி. கோமேதகம், துறவியைத் திருப்பிக் கேட்டாள்; ''அப்படியானுல் நீங்கள் எதற்காக துறவியானீர்கள்?'' என்று!

''நான் எனக்காகப் பேசவில்லை! உலகத்திற்காக வாதாடுகிறேன்!'' என்று பதில் கூறினுன் துறவி. உபதேசங்கள், கேள்விகள், பதில்கள், ஆடல்கள், பாடல்கள்—கோமேதகத்திற்கும், துறவிக்கும் ஒரு நல்ல உறவை ஏற்படுத்தி விட்டன. நாட்களும் நகர்ந்து கொண்டேயிருந்தன. துறவியிடத்திலே கோமேதகத்திற்கு அன்பும், மரியாதையும், பணிவும் மென்மேலும் அதிகமாகிக்கொண்டிருந்தன. அதைப் பயன் படுத்தி தான் வந்த காரியத்தை சாதித்துக் கொள்ள முடிவு செய்தான் அவன். அதற்கான முன்னேற்பாடுகள் எல்லாம் நடைபெறத் தொடங்கின.

★

உபதேசம் முடியும்- கலை விருந்தளிப்பாள் கோமேதகம்! இப்போதெல்லாம் துறவி அதை ரசிப்பதே ஒரு கலைதான்! அவளது ஒவ்வொரு அசைவையும், போதையேறிய கண்களோடு உற்று நோக்கினுன். அவள், தன் உள்ளத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக அதிகமாகவே உணர்ச்சிகளைக் கொட்டிக் காட்டினுன்.

கோமேதகம் பல நாள் அவனைப் புரிந்துகொள்ளவில்லை. அவனிடத்திலே அவளுக்கு களங்கமற்ற பாசம் மட்டும் வளர்ந்து கொண்டே யிருந்தது! அதையும் தெரிந்து கொண்டான் துறவி.

அவள் தன்னிடம் வைத்திருக்கிற பக்தியையும், பாசத்தையும் முதலாக வைத்துத்தான் தன் வேலையை ஆரம்பிக்க வேண்டுமென்று உறுதி கொண்டான்.

பக்தி, பாசங் கொண்டவர்கள், தங்கள் மதிப்புக்குரியவர்களால் தங்களுக்கு தவறு இழைக்கப் படும்போது, வெறி பிடித்த விரோதிகளாகவும் மாறிவிடுவார்கள்! அல்லது, மதிப்புக்குரியவராயிற்றே; மறுத்தால் மனமுடைவாரே- என்று இணங்கியும் விடுவார்கள்— உலக இயல்பு இது!

உலக இயல்பின் இரண்டாவது முறைக்கு இலக்கானுள் கோமேதகம்.

ஒரு நாள் இரவு—உபதேசம், ஆடல், பாடல், எல்லாம் முடிந்தன. நீண்ட நேரம் ஆடிய காரணத்தால் கோமேதகம் 'கால்கள் வலிக்கின்றன' என்று கூறினுள். அதை அருமையான சந்தர்ப்பம் எனக் கொண்டான் துறவி.

''கால்களை நான் பிடித்து விடுகிறேன்'' என்றுஓடி வந்தான்.

கோமேதகம் மறுத்தாள்; ''அய்யோ, பெரிய பாவம்'' என்றுள்.

''ஆண்டவனுக்கு திருப்தியான காரியம்— ஆத்மாக்களில் ஆண் பெண் வித்தியாசம் ஏது? களிமண் ஒன்றுதான்— அதிலே பிள்ளையாரும் பிடிக்கலாம்; குரங்கும் பிடிக்கலாம்! களிமண்ணிலே வித்தியாசம் ஏது?'' என்று கூறிக் கொண்டே துறவி அவள் கால்களை அமுக்கிவிட ஆரம்பித்தான். கொஞ்ச நேரம் கோமேதகம் பய பக்தியோடு இருந்தாள்— துறவி ஜெயித்து விட்டான்.

என் செய்வது? மதிப்பிற்குரியவன்- பல நாள் பழகி விட்டவன்- மனமுடைந்துவிடக் கூடாதே என்ற தாட்சண்யம்- இந்த இரண்டாவது வகை உலக இயல்புக்கு கோமேதகம் பலியாகிவிட்டாள்!

✶

பிறகு உபதேசங்கள் குறைய ஆரம்பித்தன. உல்லாச ஆடல் பாடல்கள் நிறைய ஆரம்பித்தன.

ஊரார் கண்களும் கோமேதகத்தின் குடிசைப் பக்கம் திரும்பின.

✶

அரசனிடத்திலே புகார்கள் குவிந்தன. இத்தகைய அழகி நமக்குக் கிடைக்காமல் யாரோ ஒரு துறவிக்குக் கிடைத்தாளே யென்று பொறுமை கொண்ட சிலர் அந்தப் புகாரைப் படைக்குத் தலைமை தாங்கினர். துறவி யொருவன்- மிகவும் நல்லவன்- அவனை, கோமேதகம் என்ற தாசி கெடுத்து விட்டாள்- இருவரும் ஆட்ட பாட்டத்தால், கிராமத்தையே நாசமாக்குகிறர்கள்— என்ற விதத்திலே முறையிட்டுக் கொண்டார்கள்! அரசன் இதைக் கேட்டான். அவளை அடைந்த அதிர்ஷ்டக்காரத்துறவியார் என்று தெரிந்து கொள்ள ஆவல் கொண்டான். தானே நேரில் சென்று, துறவியையும் அவளையும் கையும் களவுமாகப் பிடித்து, ''இப்போது என்ன சொல்லுகிறுய் விலைமாதே! எனக்கு இணங்குகிறுயா?'' என்று கேட்க வேண்டுமென்று துடித்

✶ தொடர்ச்சி 10-ம் பக்கம்

ஜூலை 15! இன்று திராவிடம் மும்முனைப் போராட்ட நினைவுநாள் கொண்டாடுகிறது. இதே நேரம்-ஆனால் இருபத்தினான்கு மணிகளுக்கு முன்பு-பிரான்சு நாடு கோலாகலததிலே மிதந்தது. கொடுமை முறிந்தது என்று கொட்டு முழக்கோடு ஆண்டுதோறும் விழா கொண்டாடுகிறார்கள் அந்நாட்டு மக்கள். ஏன்? அதற்கான விளக்கம்தான் இந்தக் கட்டுரை.



1789-ஜூலை 14!

பூனைகள் புலிகளாய் மாறி, புவியாள்வோர் மீது சீறி எழுந்த நாள்!

அடங்கிக் கிடந்த தேறைகள் ஆர்த்தெழுந்து படமெடுத்தாடும் நல்லபாம்புகளை நசுக்கி எறிந்த தினம்!

கூனனை நிமிர்த்தி, குன்று போல் நடக்க வைத்து, குவலயத்தாரின் புகழுக்குப் பாத்திரமான பொன்னாள்!

ஆமைகள் அடலேறுகளாய் மாறின!

ஒட்டிய வயிறும், உலர்ந்த கணகளும் கைக்கு எட்டிய கருவிகளைக் கொண்டு ஆதிக்க முதலையின் முதுகெலும்பை வெட்டின!

ஆமாம்; அன்றைய தினம் தான் கொடுங்கோல் ஆட்சியின் கோபுரக் கலசமாய்த் திகழ்ந்த **பாஸ்டிலி** படுசூரணமாயிற்று!

கடுகு நிகர்த்த சாமான்யர்கள் கடல் போன்று பரந்து கிடக்கும் காராக்கிரகத்தைத் தரைமட்டமாக்கினார்கள்! கொடுமையின் கூடாரத்தைத் தவிடு பொடி செய்தார்கள்!

"எங்கிருந்து வந்தது இவர்களுக்கு வலிமை? எலியாக வாழ்ந்தவர்கள் எருது போல் பாய்கிறார்களே! அனிச்ச மலர்போல தொட்டால் துவளும் தோள் வலியற்றோர் துப்பாக்கி தூக்கி துந்துபி முழக்குகிறார்களே! பட்டினிக்காரர்கள் பட்டாள நடையல்லவா போடுகிறார்கள்! இந்தச் சிற்றெறும்புகளைச் சூரர்களாக்கிய சக்திதான் என்ன? ரகசியப் பயிற்சியா? இத்தனை நாளும் மறைந்திருந்த ராட்சஸ சக்தியா?'



...இதுதான் பாஸ்டிலி! இது தவிடு பொடியான நாள்தான் ஜூலை 14!...

இப்படியெல்லாம் சரித்திரம் படிக்கும் நாமும், சரித்திரம் எழுதிக் கொண்டிருந்த லூயி மன்னனும் நினைத்து நினைத்து சித்தம் சோர்வதிலே ஆச்சரியமொன்றுமில்லைதான்!

பிரான்சிலே பாஸ்டிலி வீழ்ந்ததையும். முடியரசு சரிந்ததையும் 'பிரெஞ்சுப் புரட்சி' என்ற அழகான தொடரினால் குறிக்கிறார்கள்!

அந்த 'அழகான தொடர்'தான் 'மக்கள் மிரண்டால் மன்னன் மண் பொம்மைதான்!' என்ற தத்துவம் பூக்கும் சோலையாக இருக்கிறது!

புரட்சிகள் சரித்திரத்து வானத்தில் திடீரென்று தோன்றி, திகைப்பு தந்து மறைந்து விடும் வால் நட்சத்திரங்களல்ல! ஒளி காட்டி ஒளிந்து கொள்ளும் மின்னலுமல்ல!

புரட்சிகள் தோன்றுவதில்லை; அக்ரம ஆட்சியால் தோற்றுவிக்கப் படுகின்றன!

திடீரென்று அல்ல; தினையளவாக; தினந்தினம் வளர்கிறது!

கோலேந்திகள் கொடுமையின் சிகரங்களாயிருந்தால், அவர்களையறியாமலே அவர்கள் அந்த நெருப்பிலே நெய் வார்க்கிறார்கள்!

பிரான்சு நாட்டு அரசபீடம் அப்படித்தான் செய்தது!

15-வது லூயி 'பிரளயம் வந்தால் எனக்குப் பின் வரட்டும்' என்று சொல்லிவிட்டு சாராயப் பீப்பாய்களைக் காலி செய்து கொண்டிருந்தான். அவனுக்குப் பின் வந்த 16-ம் லூயி, "அரசாங்கமா? அது நான் தானே!" என்று அகம்பாவ மொழிகளை உதிர்த்தான். அதற்காகத்தான் பலிபீடத்திலே அவனது உதிரத்தைத் தெளித்து பிரான்சு நாட்டு மக்கள் அவனுக்குப் 'பிராயச் சித்தம்' செய்தார்கள்!

புல்லை புசிக்கச் சொன்ன **பௌலன்**—பிச்சையெடுக்கச் செய்த பிரபுக்கள்—இவர்களால் பிரெஞ்சு நாட்டு எரிமலை குமுறிக் கொண்டிருந்தது. அந்த மலைச் சிகரம் வெடித்து, தீக் குழம்பை வாரியிறைத்த தினம் தான் ஜூலை—14!

பாஸ்டிலி உடைந்தது—அதோடு பிரான்சு மக்களைப் பிணைத்திருந்த அடிமைத் தளையும் உடைபட்டது!

பகட்டு உடையும், பட்டுக் குல்லாயும் கொண்டு, முகவெட்டு மங்கையரின் மார்பிலே சாய்ந்திருந்த 'பிரபுத்வம்' அடியற்ற மரம்போல சாய்ந்தது!

இராணுவத்தையே நம்பி வாழ்ந்தான் லூயி! பீரங்கிகளும், அவைகளுக்கு உணவளிக்கும் கந்தகப் பொடியும் இருக்கும் வரையிலே கவலையின்றி வாழலாம்—என்று கனவு கண்டான்!

'சுடு' என்று உத்தரவிட்டால் சுடுகாட்டையே நிரப்பிவிடும் சிப்பாய்களை நம்பி செங்கோலேந்தி சிரிப்புக்கார சுந்தரிகளுடன் சரசமாடிக் கொண்டிருந்தான்!

'புரட்சியாம், புரட்சி! துப்பாக்கியைக் கண்டவுடன் தூர ஓடிப் போகும் தொடை நடுங்கிகளா புரட்சி செய்யப் போகிறார்கள்?'—என்று துயில் கொண்டிருந்தான்!

அய்யோ, பாவம்! ஜூலை 14-ந் தேதியன்று பாஸ்டிலியைச் சூழ்ந்துகொண்டு புயல்போல ஓலமிட்ட பொதுமக்களைச் சுடு என்று சொன்னான் லூயி—கூடியிருந்தோர் குருதி வெள்ளத்திலே மிதப்பார்கள்; அவர்கள் தலைகள் அறுந்து தரையிலே விழுந்துவிடும்-என்று விம்மிதம் கொண்ட வேந்தன்!

அந்தோ, பரிதாபம்! துப்பாக்கிகள் முழங்கவில்லை; பீரங்கிகள் மௌன விரதம் பூண்டன!

மக்களின் மார்புக்கு வைக்கப் பட்டிருந்த குறி காராக்கிரகத்தின் கதவுக்குத் திருப்பப் பட்டது!

பாஸ்டிலி பொதுமக்கள் வசமாயிற்று!

அதற்கு முன்னாள்-ஜூலை 13-அன்று நடைபெற்ற நிகழ்ச்சியொன்று கொடுங்கோலர்கள் எப்படி குருடர்களாகவுமிருக்கிறார்கள் என்பதை விளக்குவதாக இருக்கிறது!

லூயி வார்சேல்சில்இருந்தான். சுருண்டு போனவர்களின் சக்கரவர்த்தி விருந்துமண்டபத்திலே—வேல்விழியரின் நடுவிலே உட்கார்ந்திருந்தான்!

ஆடலுண்டு; பாடலுண்டு; பக்கத்திலிருந்த மங்கையருடன் ஊடலுமுண்டு! — இவையெல்லாம் மாளிகைக்கு உள்ளே தான்.

வெளியே பாரிஸ் நகரத்து மக்கள் அணிவகுத்து வந்தார்கள்—வீரப் பெண்மணிகள் சிலரது தலைமையிலே!

ஆரணங்குகளின் கீழே அணி அணியாய்த் திரண்டு வந்த அந்த 'அழுத்தப் பட்டோர்' கூட்டம்—சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் பேசும் 'மனித உரிமைப் பிரகடனத்'திலே மன்னனது கையெழுத்தைப் பெற்று, 'பாரீஸ் மக்களுக்குப் பயந்து கொண்டு வார்சேல்ஸ் வந்திருக்கிறாயே, வலிமையற்ற வேந்தே! உடனே தலைநகரத்துக்கு திரும்பிச் செல்!' என்றும் அவனை கட்டாயப் படுத்தியது.

'மனித உரிமைப் பிரகடனத்'திலே மன்னனின் தூஷனையல்லவோ அடங்கியிருக்கிறது — என்று லூயி திகைத்தான். ஆனால், திரளான மக்கள் வெள்ளம் அவன் தலையைச் சுழல வைத்தது!

—இந்த நிகழ்ச்சி நடைபெற்ற மறுநாள்தான் மனித உரிமையைக் குழி தோண்டிப் புதைக்கும் மயான பூமியாக விளங்கிய பாஸ்டிலி பொடிப் பொடியாயிற்று!

சிறை உடைந்தது! எங்கே தங்கள் தலை உடையுமோ என்று ஐரோப்பிய அரசுகள் பீதிகொண்டன!

ஜூலை 14—மனித இனத்தின் மாசு துடைக்கப்பட்ட நாள்! 'அது' நடைபெற்றிரா விட்டால் மனிதகுலம் முதுகெலும்பை இழந்திருக்கும். அடிமைகளாய், எடுபிடிகளாய்த்தான் மனிதன் வாழ வேண்டியநிலை பிறந்திருக்கும்!

'விதி'யை மாற்றி அமைத்தது ஜூலை 14!

ஆதிக்க வெறியர்களின் சதியை உடைத்தது ஜூலை 14!

★

எப்படியோ தெரியவில்லை, நம்முடைய 'ஜூலைப் புரட்சி'யும், பிரெஞ்சுப் புரட்சியும் ஒரு சில மணி நேர வித்யாசத்திலே நடைபெற்றிருக்கிறது!

ஜூலை 13-அன்று ராயபுரத்திலே அண்ணா உள்ளிட்ட

...புரட்சிக் காலத்திலே புலியாகிப் போன பூனையை இப்படித்தான் ஆவேச உருவமாக சித்தரித்துக் காட்டுகிறார்கள்!...

ஐவரும் கைதானார்கள்! ஜூலை 14-அன்று கல்வித் திட்டத் தளபதி தோழர் சம்பத் முன்பே கைதாகி விட்டதால், தோழியர் சத்தியவாணிமுத்து ஒரு அணிவகுப்புக்கு தலைமை வகிக்க, அவர்களும் கைதாகியிருக்கிறார்கள்! ஜூலை-15-அன்று தான் கல்லக்குடி போராட்டமும், ரயில் நிறுத்தப் போராட்டமும் நடைபெற்று, ஐயாயிரவர்

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

31.

ரகசியமும் - - அம்பலமும்!

"எழுவானுக்குத் தொழுவானுக்கும் இடையிலே...
காக்கை பறக்கும் நிழலிலே...
கள்வர் புகும் வழியிலே...
கண்டாலும் 'கம்மாளர்' கண்ணிலே...
எழுபது கோடி பசும்பொன்..."

கையிழந்த அந்த மனிதன் யார் என்று பரிமளா கண்டு பிடித்து விட்டாள். அவள் அஞ்சியபடி அத்தான் துரையுமல்ல; அந்தக் கிழவருமல்ல! ஐயப்பனின் உருவமே அது! ரத்தத்தால் ஐயப்பனின் மார்பகமெல்லாம் நனைந்து போயிருந்தது. வெட்டுண்ட கரத்திலேயிருந்து ரத்தம் கொட்டிக் கொண்டேயிருந்தது. துக்காராமுக்கு நடுக்கம் தாங்கவில்லை. தெருக் கோடிகளிலே தம்பட்டமடித்து மாயா ஜாலக்காரன் வேடிக்கைக்காக காட்டுவானே ரத்தம்—அந்த ரத்தத்தைப் பார்த்தே மயக்கம் போடக்கூடிய வீராதி வீரன் துக்காராம்! உண்மையிலேயே எங்கேயோ ஒரு அனாதரவான இடத்தில் இதுபோன்ற ஒரு பயங்கர சம்பவத்தை காணுவதென்றால் எப்படியிருக்கும்? உடம்பெல்லாம் உதறலெடுத்தது அவனுக்கு! ஆனால் அந்த நடுக்கத்திலும். வெள்ளியம்பலத்தின் கைபிடியிலிருந்து தப்புவதற்கு ஒரு நல்ல யோசனை மின்னல் வேகத்திலே தோன்றியது. வெட்டுண்டு கிடக்கும் மனிதன் யாரென்று அவனுக்கும் தெரியவில்லை: வெள்ளியம்பலத்திற்கும் தெரியவில்லை. இதை துக்காராம் பயன்படுத்திக் கொண்டான் தன் அபூர்வ யோசனையை செயல் படுத்தவும் தொடங்கி விட்டான்.

"ஆகா! அய்யோ! இவரா? என்னய்யனே! உமக்கா இந்த கதி ஏற்பட்டுவிட்டது? தாளேன்! தாளேன்!!" என்று தவித்தான். தகதகவெனக் குதித்துக் கத்தினான்.

அதைக் கண்ட வெள்ளியம்பலம். "யாரப்பா இது? உனக்குத் தெரியுமா?" என்று ஆவல் ததும்பக் கேட்டார்.

"யாரா? இவர் யாரா? அய்யோ! தாழி உடைந்து விட்டதய்யா, வெண்ணெய் திரளும் போது! இவர்தான் நாம் தேடி வந்தவர்! இவரிடமே உங்களை அழைத்து வந்தேன்!"-துக்காராம் பிரமாதமாக நடித்தான். அந்த சோக நாடகத்தை வெள்ளியம்பலம் நம்பி விட்டார்.

யாரோ ஒருவன் வெட்டுப்பட்டுக் கிடக்கிறான் என்ற அலட்சிய எண்ணத்தோடு இருந்தவருக்கு, திடீரென அக்கரை வெள்ளம் அலை மோதிக் கொண்டு கிளம்பியது. சாகக் கூடாத வயதிலே சாகிற பாசமுள்ளவர்கள், கடைசி மூச்சோடு போராடிக் கொண்டிருக்கும் போது கூட, மனந்துணிந்து "கையெழுத்துப் போடு இந்த உயிலிலே!" என்று கோரிக்கை சமர்ப்பிக்கிற உலகம்—அந்த உலகத்திலும், உள்ளத்தை எடுத்து வைத்து விட்டு உலவுகிற பிரமுகர்கள் - அத்தகைய பிரமுகர்களின் அணிவகுப்பிலே ஒருவரான வெள்ளியம்பலம்!

அவர் எப்படி ஐயப்பனின் உயிர் போக சம்மதிப்பார்; புதையல் ரகசியத்தைப் பெற்றுக் கொள்ளாமல்! ஆகவே ஓடினார் ஆற்றுக்கு! தன் மேல் துண்டை நனைத்து எடுத்துக் கொண்டு ஐயப்பனிடம் வந்தார்; அவனது முகத்திலே தண்ணீரைப் பிழிந்தார்; அவனது உடலை மெதுவாக அசைத்தார்; உயிர் கொஞ்ச நஞ்சம் ஒட்டிக் கொண்டிருக்கிறதா என்று கவனித்தார்; அவ்வளவு கவலை அவருக்கு அவன் மீது!

அவனுக்கு தப்பித் தவறி உயிர் வந்து விடக்கூடாது; வந்தால் தன் பாடு ஆபத்து- என்று எண்ணிக் கொண்டிருந்த துக்காராம் திடுக்கிடும் வகையிலே ஐயப்பன் மெதுவாகக் கண்ணை விழித்துப் பார்த்தான். உடலிலேயிருந்த ரத்தம் பெரும் பகுதி வெட்டுண்ட கரத்தின் வழியே வெளியேறி விட்டதால், ஐயப்பன் அசையக் கூட சக்தியற்றிருந்தான்.

"கண்ணைத் திறந்து விட்டான். கொஞ்சம் வாயையும் திறந்து அந்த ரகசியத்தை சொல்லி விட்டால் போதும், கடவுளே!" என்று பிரார்த்தனை செய்தார் வெள்ளியம்பலம்.

ஐயப்பன் தன் வரண்டு போன வாயைத் திறந்தான். உலர்ந்த உதடுகளை அசைத்தான் ஈரமற்ற நாக்கு அசைக்க முடியாதபடி ஒட்டிக் கொண்டிருந்தது.

அவன் தாகத்தால் கஷ்டப்படுகிறான் எனக் கருதிய வெள்ளியம்பலம், துண்டிலே நனைத்திருந்த தண்ணீரை அவன் வாயிலே பிழிந்தார். அழுக்குத் துணியோடு பிழியப்பட்ட அந்த நீரை ஆவலாகக் குடித்தான் ஐயப்பன்.

"அப்பாடா!" என்று சொல்வது போல அவன் கண்கள் பிரகாசம் பெற்றன. தலையை மட்டும் திருப்பி சுற்றுமுற்றும் பார்த்தான்.

"ஐயோ! என்ன இடி விழப் போகிறதோ?" என்று ஏங்கித் தவித்தான் துக்காராம். ஆனாலும் சமாளித்துக்கொண்டு, ஐயப்பனின் பக்கத்திலே கவலையோடு உட்கார்ந்து கொண்டான். அம்பலத்திற்கு அவசரம் தாங்கமுடியவில்லை.

"அய்யா! அய்யா! அந்தப் புதையல் ரகசியம் எங்கேயிருக்கிறது?" என்று பதட்டத்தோடு கேட்டார். ஐயப்பன் கண்களை மிரள மிரள விழித்தான். தொண்டையிலே விக்கல் வேறு ஆரம்பமாயிற்று.

"அடபாவி! செத்துவிடுவான் போலிருக்கிறதே!" என்று பதறிய அம்பலம், முயற்சியைக் கைவிடாமல், மறுபடியும் "புதையல் ரகசியம் எங்கேயிருக்கிறது?" என்ற கேள்விக் கணையைத் தொடுத்தார்.

"புதையல்! புதையல்!! புதையல் ரகசியம்!!"—புலம்ப ஆரம்பித்தான் ஐயப்பன்.

"ஆமாம், புதையல் ரகசியந்தான்!" என்று வலியுறுத்தினார் வெள்ளியம்பலம். வீடு பற்றி எரியும்போது பீடிக்கு நெருப்பு கேட்டவனையும் மிஞ்சிவிட்டார் அவர். ஐயப்பனோ மரண முகப்பில் ஏதேதோ உளறிக் கொண்டிருந்தான். சிறிது பிரக்ஞை வரும். அப்போது கண்களை அகல விழிப்பான். ஏதோ சொல்ல நினைப்பான். நினைவு தடுமாறும். இப்படி மாறி மாறி அவன் அவஸ்தைப் பட்டான். அந்த மரணாவஸ்தையையும் பொருட்படுத்தாமல் தன் காரியத்தை சாதித்துக்கொள்ள துடியாய்த் துடித்தார் அம்பலம்.

"தயவு செய்து சொல்லுங்கள்! புதையல் ரகசியம் யாரிடம் இருக்கிறது?"

ஐயப்பன், கண்களை விழித்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். பரிமளாமீது அவன் பார்வைப் பட்டது பல்லைக் கடித்துக்கொண்டு கத்தினான். "இவளுடைய காதலன்—ஆசை நாயகன்-அவனிடம்..." என்று அவன் முடிப்பதற்குள்,

"யாரிடம்? துக்காராமிடமா?" என்று அவன் தோள்களைக் குலுக்கினார்.

"இல்லை! துரை! துரை! துரை! அவளோட ஆசைப் புருஷன் — அந்த நாடகக்காரத் துரை!"

"யார், துரையா? பரிமளாவோட புருஷன் துரையா? இல்லியே; இதோ இந்தத் துக்காராமல்லவா?" என்று கத்தினார் வெள்ளியம்பலம்.

"இல்லை; துரைதான்! அந்த துரையும், மாயாண்டிக் கிழ[illegible]ருந்தான்....என்னை...என்னை..." என்று ஏதோ உளறிக்கொண்டே கண்ணை மூடிக்கொண்டான் ஐயப்பன்.

அம்பலம் விடுவாரா? மிச்சமிருக்கிற உயிரையும் தேடித்

தோண்டி இழுத்துவந்து அவன் நாக்கிலே நிறுத்திப் பேச வைக்க முயன்றார்.

"அதெல்லாம் இருக்கட்டும் —புதையல் ரகசியம் இப்ப எங்க இருக்கு?"

"இதோ, இவளைக் கேளுங்க—இவ சொல்லுவாள்! அந்த மாயாண்டி — துரை—ரெண்டு பேரையும் விடாதிங்க!"

ஐயப்பனால் அதற்குமேல் பேச முடியவில்லை. விக்கல் அதிகமாகிவிட்டது. துக்காராம், மெய்மறந்து சோகத்திலே அனைத்தையும் துறந்து விட்டவன்போல அசைவற்று நின்றான். ஐயப்பனின் உடல் புழுப் போல் நெளிந்தது. வாயை இரண்டு முறைப் பிளந்தான். புது உண்மைகள் வருமா என்று எதிர்பார்த்தார் அம்பலம். ஐயப்பனே இறுதி மூச்சை விட்டுவிட்டு வாயையும் கண்களையும் இறுக மூடிக்கொண்டான். தொட்டுப் பார்த்தார்—உதட்டைப் பிதுக்கினார். துக்காராம் 'ஓ'வென அலறி, "அய்யோ! நான் என்ன செய்வேன்?" என்ற ஒப்பாரியைத் தொடங்கினான். பரிமளாவுக்கு ஒன்றும் புரியவில்லை. ஐயப்பனின் வாக்குமூலத்தால், வெள்ளியம்பலம், துரையையும், கிழவரையும் காட்டிக் கொடுத்து விடுவாரோ என்று கிலி கொண்டாள்.

வெள்ளியம்பலத்தின் மூளை பலமாக வேலை செய்தது!

★★★ "துக்காராம்தான் தன்னுடைய காதலன் என்கிறாள் பரிமளா! செத்துப்போனவனோ அவள் காதலன் துரை என்கிறான். செத்தவனிடம் தான் புதையல் ரகசியம் இருந்ததாகத் துக்காராம் சொல்கிறான். செத்தவனோ, அந்த ரகசியம்—துரை, மாயாண்டிக் கிழவர் இருவரிடமும் இருக்கிறது என்கிறான். ஒருவேளை, அவர்கள் இவனைக் கொன்றுவிட்டு ரகசியத்தைக் கைப்பற்றியிருக்க வேண்டும். ரகசியம், துரையிடமும் — மாயாண்டியிடமும் தான் சிக்கியிருக்கவேண்டும்!... அது சரி' பரிமளாவுக்கு, துரை காதலனா? துக்காராமா? ஒருவேளை இருவருமே காதலர்களாக இருந்தால்? அப்படித்தானிருக்கவேண்டும்! இவளுடைய இரண்டு காதலர்களுக்குமே, தங்கம் புதைந்து கிடக்கும் இடம் தெரிந்திருக்க வேண்டும்! நாம்தான் வீணாகக் குழப்பிக் கொள்கிறோம். அப்படியானால், பரிமளா, துக்காராம் இருவரையும் சில நாளைக்குத் தன் பாதுகாப்பிலே வைத்திருக்க வேண்டும். அப்படிவைப்பதால், துக்காராமும் பரிமளாவும் காதலர்கள்தானா என்ற உண்மை தெரிந்துவிடும்! அதோடு, பரிமளா மூலமாகவே துரையையும் பிடித்துவிட வேண்டும்! அந்த நாடகக்கார துரையும், மாயாண்டிக் கிழவனும் அகப்பட்டுவிட்டால், பிறகு எந்தவிதக் குழப்பமுமில்லாமல் என் ஆசை நிறைவேறிவிடும்'"

—இப்படி யோசித்தார் வெள்ளியம்பலம். பிறகு ஒரு முடிவோடு பரிமளாவைப் பார்த்து, 'பரிமளா' உன்னைப் பற்றி நானா புரிந்து கொண்டேன் — உனக்கு இரண்டு காதலர்கள்! ஒருவன் துரை! இன்னொருவன் துக்கராம்!" என்றார்.

"இல்லை-இல்லை! துக்காராம் மட்டுந்தான்-துரையை எனக்குத் தெரியவே தெரியாது!" என்றாள் பரிமளா!

"அதிருக்கட்டும்--இப்போது அதற்கு சாட்சி வேண்டாம்! நான் இடுகிற கட்டளையை நீயும் துக்காராமும் நிறைவேற்ற வேண்டும்!"

"என்ன கட்டளை?"

"உங்கள் இருவரையும் என் வீட்டிற்கு அழைத்துப் போகிறேன், யாருக்கும் தெரியாமல்! அங்கே. உங்கள் இருவருக்கும் ரகசியமாக திருமணத்தை நடத்தப் போகிறேன்"

இதைக் கேட்டு துக்காராம் மகிழ்ச்சி அடையவில்லை இதில் ஏதோ சூது இருக்கும் என்று பயந்தான்.

"பயப்படாதே, துக்காராம்! இனிமேல் உன்னை துன்புறுத்த மாட்டேன். புதையல் ரகசியம் அந்த துரையிடம் இருக்கிறது என்பது தெரிந்தபிறகு, உன்னை எதுக்காக கஷ்டப்படுத்தணும்! பயமில்லாமல் என்னோடு திரும்பிவா!' என்றார் வெள்ளியம்பலம்.

"மருங்கப்பள்ளத்திற்கு வந்தால் அப்பா பார்த்து விடுவார்" என்றாள் பரிமளா!

"அதெல்லாம் கவலைப்படாதே! ராத்திரிக்கு போகலாம் மருங்கப்பள்ளத்துக்கு! என்னுடைய பங்களாவிலே இரண்டு பேரும் யாதொரு கவலையுமில்லாமல் இருக்கலாம். நீங்கள் இதற்கு இணங்கித்தான் தீரணும்!"

இனிமேல் தனக்குத் தொந்திரவு இல்லை என்று நம்பிய துக்காராமும் 'சரி' என்று ஒப்புக் கொண்டான்.

துக்காராமை காதலன் என்று கூறிவிட்டு, பிறகு அவனை மணக்க மாட்டேன் என்றால் உண்மை வெளியாகி விடுமே என்று பயந்த பரிமளாவும், வேறு வழியின்றி வெள்ளியம்பலத்தின் யோசனைக்கு இணங்கினாள்.

பரிமளாவை எப்படியாவது அழைத்துக் கொண்டு போய் விட்டால், அவளைக் கொண்டு துரையைப் பிடித்து விடலாமென்று உறுதி கொண்டார் அம்பலம். துக்காராம்-பரிமளா திருமணம் நடத்துவதால் அவர்கள் உண்மையான காதலர்கள்தானா என்பதையும் கண்டு பிடித்து விடலாமென்று நம்பினார். "சரி; வாருங்கள் புறப்படலாம்" என்று அழைத்தார்.

'ஐயப்பனின் பிணம் மறைக்கப் பட்டால் அத்தானும் கிழவரும் தப்புவதற்கு ஒரு வேளை சாதகமாயிருக்கும்' என்று எண்ணிய பரிமளா, "இந்தப் பிணத்தை இழுத்து ஒதப்புறமாக எறிந்து விடலாமே" என்று அம்பலத்திடம் கூறினாள்.

அம்பலமும் ஆட்சேபணை தெரிவிக்காமல், அங்குள்ள ஆழமான படுகுழியொன்றில் பிரேதத்தை இழுத்தெறிந்தார். பூமியைத் தோண்டி புதையல் எடுத்து, ஆகாயத்தை அளாவ கோட்டை கட்ட நினைத்த ஐயப்பன், பிணமாகக் குழியிலே விழுந்தான்!

வெள்ளியம்பலம் அவர்களை நோக்கி, "காதலர்காள்! புறப்படுங்க! புதையல் ரகசியம் எங்கேயிருக்கிறது என்று தெரிஞ்சாச்சி. நீங்களும் புதுத் தம்பதிகளாக ஆகிற நேரம் வந்தாச்சி! புறப்படுங்க! " என்று சந்தோஷத்தோடு அழைத்தார்.

பரிமளாவுக்கும் தனக்கும் கலியாணம் என்ற பரவசத்தோடு துக்காராம் புறப்பட்டான் – 'இன்னும் எத்தகைய துன்பங்கள் தொடருமோ?' என்ற ஏக்கத்தோடு பரிமளாவும் அவர்கள் பின்னே போக வேண்டியதாயிற்று.

[வளரும்]

முடி சூட்டிக் கொள்கிறார் - - முடி சூடா மன்னர்!

சாம்ராஜ்யபதிகள் இறந்து, புதிய சக்கரவர்த்திகள் பட்டத்துக்கு வந்தால், அந்தப் பட்டாபிஷேக நாளை நாட்டவரெல்லாம் தேசியத் திருவிழாவாகக் கொண்டாட வேண்டுமென்பார்கள்—அதன் நினைவாக நாட்டிலுள்ள கைதிகளுக்கெல்லாம் விடுதலை அளிப்பார்கள்!

—இது முடியரசு நாட்டின் வழக்கம்!

ஜனநாயக நாடுகளிலேதான் தனிப்பட்டவர்களுக்கென்று சலுகைகள் கிடையாதே! கைதிகளை விடுவிக்க விரும்பினால், அதற்கென நாடு விடுதலை பெற்ற தினமான 'குடியரசு நாளை'த்தான் பயன்படுத்திக் கொள்வார்கள்!

—இதுதான் குடியாட்சிக் கொள்கை! ஜனநாயகத்தின் இலட்சணம்!

ஆனால், இப்போது ஒரு செய்தி வந்திருக்கிறது—பண்டித நேரு தன்னுடைய வெளிநாட்டுப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு நாடு திரும்பியதை 'கௌரவிப்பதற்காக' பஞ்சாபிலே அரசாங்கம் விதித்திருந்த 144-தடையுத்தரவை நீக்குகிறார்களாம்!

பஞ்சாபிலே தாராசிங் நடத்திய போராட்டம் வெற்றி மாலை சூடுகிறது!

தடை உடைபடுகிறது;—மகிழ்ச்சிதான் நமக்கு!

அதற்கான காரணம் ஒரு தனிப்பட்ட நபரைக் 'கௌரவிப்பதற்காக'வா இருக்க வேண்டும்?

அப்படியிருந்தால், எலிசபத் ராணி முடி சூடியபோது பிரிட்டனில் கைதிகளுக்கு விடுதலை வழங்கப்பட்டதற்கும், இதற்கும் என்ன வித்யாசம் இருக்கிறது?

ஆள்வது நேருவா? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கமா?

—இப்படியெல்லாம் கேள்விகள் எழுகின்றன!

நேருவைக் கௌரவிப்பதற்காக நீக்கப்பட்ட தடை, பாஞ்சாலத்தில் அன்றே 'அகாலியர்' வடிவத்திலே பொது மக்கள் சக்தி பொங்கி எழுந்து ஆயிரக் கணக்கான சீக்கிய யுவர்கள் சிறை சென்றபோது ஏன் நீக்கப்பட்டிருக்கக் கூடாது?

அப்படிச் செய்திருந்தால் 'கோவாவிலே] போர்த்துகீசிய வெறியர்கள் கொடுமை செய்கிறார்கள்—இங்கே ஏக இந்திய வெறியர்கள் கோர விளையாட்டு ஆடுகிறார்கள்'—என்ற அவச்சொல்லையாவது இந்த அரசாங்கம் நீக்கியிருக்கலாமே!

அதை விட்டு வெட்கமில்லாமல் ஜனநாயகம் பேசும் தேசியவீரர்கள், முடிசூடா மன்னருக்கு முடிசூட்டுவானேன்?

தோழர்களின் விருப்பப்படி அடுத்த இதழ் முதல் 'புதையல்' சிறிய எழுத்துக்களில் வெளிவரும்.

ரஞ்சித் சிங்...

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

திய உத்யோகஸ்தரைச் சுட்டுக் கொன்றுவிட்டார். உண்மையில் மதன்லால் வங்காளத்தைப் பிளவு படுத்தி, வரலாற்றில் களங்கம் உண்டுபண்ண முயன்ற வைஸ்ராய் கர்சானைக் கொல்வதற்குத் தான் குறிவைத்தார்! ஆனால் அந்தக் குறி அவரை விட்டு, வேறொரு கர்சானின் உயிருக்கு உலைவைத்து விட்டது.

மதன்லால் அந்த இடத்திலேயே கைது செய்யப்பட்டு, தூக்கிலேற்றப்பட்டார்.

வாலிப வயதுதான், மதன்லாலுக்கு! தாய்நாடு காக்க தகுந்த முறையென்று தனக்குத் தோன்றியதைத் தருணம் பார்த்து முடித்து அந்தத் தங்கம் நிகர் தோழன் தூக்கு மரத்திலே தொங்கினான்! உலகத்தின் அடிமைப்பட்ட நாடுகளுக்கெல்லாம் புதுவழி காட்டிக் கொண்டிருக்கும் அயர்லந்தின் முன்னணிப் பத்திரிகைகள் யாவும், அந்த விடுதலைவீரனுக்காகத் தனித் தலையங்கம் தீட்டி தங்கள் மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனவாம். ஒரு பத்திரிகை "தன்னுடைய நாட்டிற்காக உயிரையே தத்தம் செய்து பெருமை பெற்ற மதன்லால் டிங்ராவை அயர்லந்து கௌரவிக்கிறது."—என்று எழுதியிருந்ததாம்!

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் பஞ்சாப் நெருப்புப் பிழம்பாக மாறிவிட்டது. மூலை முடுக்குகளிலெல்லாம் அரசாங்க எதிர்ப்புப் பிரசாரங்கள் புயல் வேகத்தில் பரவின. இந்திய வைஸ்ராய் இங்கிலாந்துக்கு அனுப்பியிருந்த செய்தியொன்றில், 'சமாளிக்க முடியாத நிலைமைகள் உருவாகிவருவதாக'த் தந்தி கொடுத்தாராம்.

அந்த 'சமாளிக்க முடியாத நிலைமைகளின்' தந்தைதான் பஞ்சாபின் சிங்கமென்று சொல்லப்படும் லாலா லஜபதி ராய்! பஞ்சாபிலே கொந்தளிப்பு கிளம்புவது நிச்சயமென்று தெரிந்ததும் அவர் கைது செய்யப்பட்டு பர்மாவுக்கு அனுப்பப்பட்டார்.

பல ஆண்டுகள் சென்ற பிறகு, சைமன் கமிஷனை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் அவர் பங்கேற்றபோது, பன்மொழிப் புலவர் அப்பாதுரையாரை காங்கிரசாட்சியின் போலீசார் தடிகொண்டு தாக்கியதைப் போல, அன்று வெள்ளையன் பட்டாளம் லஜபதி ராயை கடுமையாகத் தாக்கிவிட்டது. அந்தத் தடியடிப் பிரயோகத்தின்போது தரையில் சாய்ந்த பஞ்சாபின் சிங்கம் பின்னர் எழுந்து நடமாடவேயில்லை.

லஜபதிராய் போன்ற மாபெரும் மக்கட் தலைவர்களை மட்டுமல்ல; விடுதலை வெறி தாங்க முடியாமல் பலாத்கார முறைகளைப் பத்தினி யாக்கிக் கொண்ட பகவத் சிங்குகள் பஞ்சாபிலேதான் தோன்றியிருக்கின்றனர்.

1914-ம் ஆண்டு, ஹாங்காங்கிலிருந்து 351 சிக்கியர்களும், 21 பஞ்சாபி முஸ்லிம்களும் ஆயுதங்களுடன் ஒரு ஜப்பானியக் கப்பலில் கிளம்பி இந்தியா வந்து சேர்ந்தார்கள். பஞ்சாபிலே ஒரு மாபெரும் புரட்சியைத் துவக்குவதென்பது தான் அவர்கள் திட்டம். போர்ப் பிரகடனத்தையும், சுதந்தரப் பிரகடனத்தையும் தயாராக வைத்திருந்தார்கள். மாநிலத்திலே ஆங்கிலேயருக்கு கேந்திர மையமாக இருந்த இடங்களை யெல்லாம் வெடிகுண்டு வைத்து தகர்ப்பதற்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால் அந்த இராவணன் பட்டாளத்திலே விபீஷணன் ஒருவன் முளைத்து விட்டான்!

அவன் கொடுத்த செய்தியினுதவியால் ஆங்கிலேயர்கள் புரட்சிக்காரர்களையெல்லாம் பிடித்து இருந்தவிடம் தெரியாமல் பொசுக்கி விட்டார்கள். அந்தத் துரோகியின் விளைவாக ஐயாயிரம் பேருக்கு சிறைவாசம் கிடைத்தது! ஐநூறு பேர் சாவுருக்குப் பயணமானார்கள்! எண்ணூறு பேருக்கு ஆயுள் தண்டனை கிடைத்தது! ஐநூறுக்கு மேற்பட்டவர்கள் அந்தமானுக்கு அனுப்பப் பட்டார்கள்!

இப்படியெல்லாம் விடுதலைப் போராட்டத்துக்கு ஆயிரக் கணக்கில் தன்மைந்தரை அனுப்பிவைத்த பாஞ்சாலத்தில்தான் 'ஜாலியன் வாலாபாக்'– அல்ல; அல்ல; 'குன்றத்தூர்' நடைபெற்றது! ஆச்சாரியார், சுமார் அரை நூற்றாண்டு கழித்து கல்லக்குடியில் செய்து காட்டியதை, அன்றே டயர்-ஓடயர் போன்ற வெள்ளைத் தளகர்த்தர்கள் பஞ்சாபியர்களைக் கொன்று குவித்து, ஆச்சாரியாருக்குப் "பாடப் புத்தகம்' எழுதினார்கள்! முன்னறிவிப்பு ஏதுமின்றி தொடர்ந்து பத்து நிமிஷங்கள் பொதுமக்களை வேட்டையாடியதும்—ஆயிரத்து அறுநூற்றி ஐம்பது ரவுண்டுகள் சுட்டதும்—அதன் விளைவாக ஆயிரக் கணக்கானவர் செத்து மடிந்ததும் நமக்குப் பழைய கதைதான். கழகக் காளையரெல்லாம் மும்முனைப் போராட்டத்தில் குதிப்பதற்கு முன்பே அந்த நிகழ்ச்சியைப் பற்றித்தானே படித்தோம்!

—இதுதான் பாஞ்சாலம் வரைந்த வீர காவியத்தின் வெற்றிப் பட்டயங்கள்!

போர் முரசு ஒலிக்கக் கேட்டு, தனயனையும், தளிர்க் கரம் பிடித்து புலிப்பல் தாலி கட்டிய கணவனையும் அனுப்பிவைத்து—கடைசியாக தன் மழலைச் செல்வத்துக்கும் பட்டாள உடை உடுத்தி, பட்டாக் கத்தியுடன் களத்துக்கு அனுப்பிய வீரத் தாயைப் பற்றி இலக்கியம் பேசக் கேட்டிருக்கிறோம்.

பாஞ்சாலமும் அதுபோலத் தான்! இதுவரை சோதரனையும், சொந்தக் கணவனையும் செருகளம் அனுப்பி — அந்தச் சோகம் தாங்காமல் செருமிக் கொண்டிருந்தது. இப்போது அந்த நிலைமையிலே ஒரு மாற்றம் — மகனும் மடிந்துவிட்டான்; இப்போது மாதாவே மறவனைப் போல் போர்க்களம் புகும் காட்சி நடைபெறுகிறது!

இன்று மாஸ்டர் தாராசிங்கின் 'அகாலி' இயக்கம் யாராலும் அசைக்கமுடியாத இலட்சியக் கோட்டையாகிவிட்டது. இதுவரை நாலாயிரம் பேருக்கு மேல் சிறையிலே வாழ்கின்றனர். பத்திரிகைக் காரியாலயங்களெல்லாம் தேசிய அரசாங்கத்தினரால் பூட்டி, 'சீல்' வைக்கப் பட்டுவிட்டன. எங்கும் சுடுகாட்டு அமைதி நிலவுகிறது. ஆமாம்; பாஞ்சாலத் தாய் போரிலே குதித்துவிட்டாள்!

சிக்கியர்களுக்கென 'சீக்கிஸ்தான்' பெறுதவரை போராட்டம் ஓயப்போவதில்லை! தாய் வெற்றித் தார் புனையாதவரை போர் நடந்து கொண்டுதானிருக்கும்! அன்று லாலா லஜபதி ராய் ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துத் தோள் தட்டினார்; இன்று அவர் வழிவந்த தாராசிங் 'ஏக இந்திய' ஏகாதிபத்தியத்துடன் போர்க்கொடி உயர்த்தியிருக்கிறார்!

மாஸ்டர் தாராசிங் நம்முடைய தோழர்! — ஏனெனில் அவரும் நம்மைப்போல தனி நாடு கேட்கிறார்!

அவர் நமக்கு உற்ற துணை! -ஏக இந்தியக் கொள்கையைக் கூறுபோடுவதில நம்மையும் முந்திக்கொள்ளும் நெஞ்சுஉரம் அவரிடம் இருக்கிறது!

அவர் நம்முடைய நெருங்கிய உறவினர்!— நாம் கம்யூனல் ஜீ. ஓ. கேட்பதுபோல அவரும் அரசாங்கப் பணிகளிலே சீக்கியர்களுக்கு அதிக இடம் வேண்டுமென்று முழக்கம் செய்கிறார்!

அவரும் அவரது அணிவகுப்பில் இருப்போரும் நம்முடைய வர்க்கம் — அமுக்கப்பட்ட பாட்டாளிகள் உலகத்தில் எந்தப் பகுதியில் இருந்தாலும் மே தினத்தன்று தாங்கள் யாவரும் ஒரே இனம் என்று உணர்வதைப் போல; மும்முனைப் போராட்டம் நடந்த இந்த நாளில், விடுதலைப் பள்ளு பாடும் எந்த இனமும் — எந்த நாட்டிலிருந்தாலும் ஒரே பாதையிலே பிரயாணம் செய்பவர்கள் என்பதை உணர்கிறோம்! அடிமை விலங்கொடிப் போர் அத்தனை பேரும் நம்முடைய சொந்தக்காரர்கள்!

கடைசியாக ஒன்று! இந்தியா பிரிக்கப்பட்டபோதெல்லாம் இரண்டிரண்டு அங்கங்களாகத் தான் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பாரதப் படத்தின் மேலேயிருக்கும் பர்மாவும், கீழேயிருக்கும் இலங்கையும் முதன் முதலாக சுதந்தரக்கொடி பறக்கவிட்டன! பிறகும் அந்தப்படம், பாகிஸ்தான்—இந்துஸ்தான் என்றுதான் இரண்டாகப் பிளந்தது!

இப்போதும் அதே நிலைமை ஏற்படலாம்! அங்கே 'சீக்கிய நாடு'ம், இங்கே 'திராவிடநாடு'ம் ஒரே நேரத்தில் பிரிக்கப்பட்டால் கூட நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

விடுதலை பெற்ற சீனா முதன் முதலாக தன்னுடைய ஆசியச் சோதரனென்று நினைக்கும் இந்தியாவுடன் நெருங்கி உறவாடுவதைப் போல, நாளை, 'சீக்கிஸ்தானு'ம் 'திராவிடஸ்தானு'ம் இரட்டைக் குழந்தைகள் போலப் பழகலாம்! ஆருடமல்ல; அரசியல் தூரதரிசனம்!

வாழ்க விடுதலை இயக்கங்கள்!

ஒழிக ஏகாதிபத்ய அமைப்புகள்!

— (மா. ன்.)

★

அய்யோ, அதற்குள் வரவில்லையே!

★

நேரு ரஷ்யா சென்றார்—அங்கே இரும்புத் தொழிற்சாலைகளை, விஞ்ஞான ஆராய்ச்சிசாலைகளை, ரஷ்ய பூமிக்கு உரமூட்டும் தொழில் நிலையங்களைக் கண்டார்— இந்தியாவுக்கு வருமாறு புல்கானினையும் அழைத்திருக்கிறார். கம்யூனிஸ்டு காரியதரிசி அஜாய்கோஷும் புல்கானினுக்கு (மனதுக்குள்) வாசித்தளிக்க வாழ்த்துப் பத்திரம் தயார் செய்கிறாராம். புல்கானின் இங்கு வந்து எதைக் கண்டாலும் காணாவிட்டாலும், அவசியம் காணவேண்டிய அற்புதக் காட்சி ஒன்று சென்ற கிழமை நடைபெற்றது.

அதாவது,

தில்லைத் திருப்பதியாம் சிதம்பரத்திலே மகத்தான கும்பாபிஷேகம் ஒன்று நடைபெற்றது — 2 லக்ஷ ரூபாய் செலவிலே 'பிர்மாண்டமான' ஏற்பாடுகள்— ஓமகுண்டத்திலே ஊற்றப்பட்ட நெய் மாத்திரம் இருபத்தையாயிரம் ரூபாய் மதிப்பாம்!

பாலின்றிப் பாலகர் சாவும் பாரத மணித் திருநாடு இது! இங்கே பார்ப்பனத் தீட்சதர்கள் நடத்தும் யாகத்திற்கு 'நெய்க் கடல்' வெட்டி விடப்படுகிறது! 36 ஓம குண்டங்கள்—அங்கே வேதம் படிக்க இருநூறு பார்ப்பனர்கள்!

தில்லையிலே நெய் குடங் குடமாக!
தெருவிலே ஏழையின் கண்ணீர் குளம், குளமாக!
புல்கானின் காண வேண்டிய காட்சி!
அய்யோ, அதற்குள் அவர் வரவில்லையே!

சிந்தனைக்கு சில!

★

★ செஞ்சீனத்தை ஐக்ய நாடுகள் சபை ஒரு நாட்டாக அங்கீகரித்தது; ஏற்றுக் கொள்ளவில்லை.

இதை முற்போக்கு இயக்கங்கள் அனைத்தும் கண்டித்திருக்கின்றன.

திராவிட கழகமும் ஐ. நா. வின் இந்தச் செயலைக் கண்டிக்கத் தவறவில்லை.

ஆனால்,

★★ அதே திராவிடர் கழகம், இரண்டு லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகமெனும் வலிமை வாய்ந்த இயக்கத்தை ஒரு இயக்கமென்றோ, கட்சியென்றோ இன்னும் ஒத்துக் கொள்ளத் தயாராயில்லை.

★ ★ ★

★ ஐ. நா. முத்திரையில்லாமலேயே அகிலத்திலே செஞ்சீனம் சிறப்போடு வாழ முடிகிறது.

★★ திராவிட முன்னேற்றக் கழகமும், வலிவோடும் பொலிவோடும் வாழ முடிகிறது; வளர்ந்தும் வருகிறது!

★ ★ ★

★ 'பார்ப்பனீயம் ஒழிக' என்கிறது தி. மு. கழகம்.

★ "இல்லை; பார்ப்பான் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும்-பார்ப்பனீயம் மட்டும் ஒழிந்தால் போதும் என்கிறவர்கள் பார்ப்பன தாசர்கள்! ஆரிய முன்னேற்றக் கழகத்தினர்" என்று கூறுகிறது திராவிடர் கழகம்!

★★ பெரியாரின் பிராமண யுவர் சங்கப் பேச்சும், மாவூர் சம்பவமும் எடுத்துக் காட்டப்பட்டன நம்மால்!

★ ஆயினும் ஏசற்கணைகளை தொடுக்கிறது விடுதலை!

அவ்வளவு ஏன்? மும்முனைப் போராட்டத்தில் சில பார்ப்பனத் தோழர்கள் கலந்து கொண்டு சிறை சென்றனர். "பார்! பார்! ஆச்சாரியார் சட்டத்தையும் சதி வழக்குகளையும் நீட்டிவிட்டார்—அவரைக் 'குல்லாய்' போட, 'நாங்கள் பார்ப்பனீய விரோதிகளே ஒழிய பார்ப்பன விரோதிகளல்ல'—என்று கூவுகிறார்கள் பார்!" என்று கும்மாளம் போட்டார்கள்! ஊருக்கு ஊர் கேள்வித்தாள் தயார் செய்தார்கள்!

★★★ இப்போதோ திருச்சியில் துவங்கப்பட்டிருக்கும் பெரியார் சுயமரியாதை பிரசார ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலே 'பார்ப்பனர்களும் சேர்ந்து கொள்ளலாம்' என்று அறிக்கை வெளிவருகிறது, 'விடுதலை'யில்!

★ ★ ★

★ 'பார்ப்பனீயம் வீழ்க' என்று கூறிடும் நாம், தீண்டாமை ஒழிப்பு சுவரொட்டிகளை மறுத்த பார்ப்பனர்களின் கூச்சலுக்கு மறுப்பளித்து, அதே சுவரொட்டிகளை மதுரை முதலிய ஊர்களில் ஒட்டினோம்.

காமராசர், ஆரியத்தின் குரலுக்கு மதிப்பளித்து—அரசினர் சுவரொட்டி ஒட்டுவதை நிறுத்திவிட்டார்—உத்திரவு போட்டு விட்டார்

★ 'பார்ப்பனீயம் ஒழிக' என முழங்கும் நாம் திராவிட கழக கண்களுக்கு பார்ப்பனதாசர்களாகத் தெரிகிறோம்.

பார்ப்பனருக்கு பயந்து உத்திரவு போட்ட காமராசரைப்பற்றி பெரியார் என்ன சொல்கிறார்; தெரியுமா?

★★★ "ஏன் அவர்களோடு வீண் தகராறு – என்று காமராசர் நினைக்கிறார்; அவ்வளவுதான்!" என்பதாகப் பெரியார் கூறுகிறார்.

★ ★ ★

★ "தி. மு. கழகத்தார் என்ன; பெரிய போராட்ட நிபுணர்களா, அவர்களிடம் நாங்கள் யோசனை கேட்பதற்கு?" என்று திராவிட கழக நிரந்தர நிர்வாகத் தலைவர் வேதாசலம் கூறினாராம்.

★★★ "இவர் ஏன் இந்த வம்புக்கு வருகிறார்? வேதாசலம் மிகவும் நல்லவர்-நிபுணர்கள் நடத்தினாலும், நிபுணரல்லாதார் நடத்தினாலும், யார் நடத்துகிற எந்தப் போராட்டத்திலுமே அவர் கலந்து கொள்வதில்லை! இவருக்கு ஏன் வீண் வம்பு?" என்று தென்னூர் வாசிகள் பேசிக் கொள்கிறார்களாம்!

கலப்படம்

"நேசிப்பதிலும், பழி வாங்குவதிலும் ஆண்களை விடப் பெண்களே அதிகக் காட்டுமிராண்டித்தனம் உள்ளவர்கள்"

—நீட்ஷே.

நாங்கள் நினைத்தால் கம்யூனிஸ்ட்டுகளைச் சுட்டுக் கொல்வோம்!

—அனந்தநாயகி;
(திருவாரூர் கூட்டத்தில்)

★

"ஒரு பெண்ணுக்கு மூன்று விதமான கணவர்கள் தேவை. அவளைப் போஷிக்க ஒருவன்; அவளைக் காதலிக்க ஒருவன்; அவளை உதாசீனப் படுத்த ஒருவன்."

—பல்கேரியப் பழமொழி.

என்னை போஷிப்பது தென்னாட்டு காங்கிரஸ் கட்சி; நான் காதலிப்பது வடநாட்டு ஆதிக்கம்; என்னை உதாசீனப் படுத்துவது...?

—காமராசர்.

★

"திறமைசாலிகளுக்குப் பின்னால் எப்போதும் பல திறமைசாலிகள் இருக்கிறார்கள்"

—சீனப் பழமொழி.

அண்ணாவுக்குப் பின்னால் தி. மு. க.வில் ஆயிரமாயிரம் 'தம்பிமார்கள்' இருக்கிறார்கள்.

—நாம்.

★

"காலியான மண்டைக்கும், காலியான வாளிக்கும் ஒரே ஒரு வித்யாசந்தான். காலியான மண்டையில் எதையுமே உட்செலுத்த முடியாது"

—ரெய்னால்ட்ஸ்.

தி. மு. க.விலிருந்து சிலர் விலகுவதற்கும் காங்கிரசிலிருந்து பலர் விலகுவதற்கும் ஒரே ஒரு வித்யாசம்தான் உண்டு. காலியான காங்கிரசுக்குள் திரும்பவும் யாரும் உள்ளே புகமாட்டார்கள்.

—உண்மை உணர்ந்தோன்.

★

"ஒரு திராட்சைப் பழம் எவ்வளவு திரண்டதானாலும் அது ஒரு குலையாகி விடமாட்டாது"

—டிஸ்ரேலி.

வெளி நாட்டில் புகழ் பெற்று நேரு எவ்வளவுதான் வளர்ந்தாலும் நாடு வளர்ந்ததாக ஆகாது.

—நாம்.

★

மூளையற்ற தலையும், யோசனை"யற்ற ஹாஸ்யமும், யோக்கியதையற்ற இதயமும், பணமற்ற மணிப்பர்ஸ் போல"

—ஏர்ல்.

ஒரு திருத்தம். காங்கிரசை விட்டுப் பிரிந்த தமிழரசுக் கழகம் போல என்று மாற்றிப் படிக்க வேண்டும்.

—'பேரிகையாளர்'.

★

"வா; என் உள்ளத்திலே குடியேறு; வாடகை தரவேண்டாம்"

—(ஒரு பெண் சொல்வதாக)
சாமுவல் லவர்.

எல்லோரும் வாருங்கள்; காங்கிரசில் சேர்ந்துவிடுங்கள்.

—கக்கன்.

★

"நான் ஒரு பெண்ணாகப் பிறக்காதது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இல்லையேல் நான் ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள வேண்டிய பரிதாபமான நிலை ஏற்பட்டிருக்கும்"

—திருமதி டீஸ்டேல்.

நான் கம்யூனிஸ்டாக இல்லாதது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இல்லாவிட்டால் நோய் சிகிச்சைக்காக மட்டுமே ரஷ்யா செல்ல முடிகிற பரிதாபமான நிலை ஏற்பட்டிருக்கும்.

—நேரு.

★

"காதலிப்பதாகக் கனவு கண்டார்கள். ஆனால் கல்யாணம் செய்து கொள்கிற நேரத்திலே விழித்துக்கொண்டார்கள்"

—போப்.

வன்னியகுல ரட்சகனாகத்தான் இராமசாமி படையாச்சியைக் கனவு கண்டோம். ஆனால் கல்விச் சலுகை கையெழுத்தாகிற நேரத்திலே விழித்துக் கொண்டோம்.

—வன்னிய வாலிபர்கள்.

★

"செத்துப்போன சிங்கத்தைவிட உயிரோடிருக்கும் நாய் எவ்வளவோ மேல்!"

—எக்லிசியாஸ்டஸ்.

இது எங்கள் தலைவருக்குப் புரிவதேயில்லை. எங்களைப்பற்றிப் பேசாமல் செத்துப்போன கட்டபொம்மனைப் பற்றிதான் பேசுகிறார்.

—தமிழரசு.

நாட்டிய கலா....

★ 4-ம் பக்கத் தொடர்ச்சி

தான். முறையிட்டவர்களை அனுப்பிவிட்டு, அன்றிரவே குதிரையேறிப்புறப்பட்டான், கோமேதகம் இருக்கும் கிராமத்திற்கு!

★

குடிசையிலே, கோமேதகமும் துறவியும்! துறவியின் காலை கோமேதகம் அமுக்கிக் கொண்டிருந்தாள். அவளது கலைந்து கிடக்கும் கருங் கூந்தலைக் கோதிவிட்டபடி சாய்ந்திருந்தான் துறவி. இருவரின் கண்களும் ஆனந்தச் சதிராடின.

"கோமேதகம்" என்று இனிமை தவழ அழைத்தான் துறவி.

"ஏன்?" என்று காதல் பொங்கிடக் கேட்டாள் அவள்.

"கலாதேவி நீ! கண் காட்டினால் விண் முட்டும் வரையில் பொன் குவிக்க பிரபுக்கள் காத்திருக்கிறார்கள்! அதையெல்லாம் விட்டு, என்னை ஆட்கொண்டாயே: அது எப்படி தேவி?"

"துறவி தாங்கள்! ஆண்டவனின் பாதார விந்தங்களில் சேர வேண்டுமெனத் தவங் கிடந்தவர். அப்படிப்பட்டவர், ஆண்டவனின் பாதார விந்தங்களை விட்டு, என் பாதார விந்தங்களை அன்றொரு நாள் பிடித்தது ஏன் ஸ்வாமி?"

"இது தெரியவில்லையா? ஆண்டவனின் பாதார விந்தங்களை, ஆயிரக் கணக்கான பக்தர்கள் பிடித்துப் பிடித்து காய்த்துப் போய்க் கிடக்கிறது! என் கலாதேவியின் மலர் போன்ற மென்மையாள பாதார விந்தங்களைத் தொடும் முதல் பக்தன் நான்தான்!"

"முதல் மட்டுமல்ல; கடைசி பக்தனும் நீங்கள்தான் ஸ்வாமி!"

"கோமா...!"

"ஸ்வாமி...!"

"உன் உறுதியை நான் குலைத்து விட்டேன்—இல்லையா?"

"இல்லை— உங்கள் உறுதியைத்தான் என் அழகு குலைத்து விட்டது!"

"உலக பந்தங்களைக் கடக்க பாதை கேட்டாய் என்னிடம்—நானோ.........உலக பந்தங்களிலே உன்னை ஆழ்த்திவிட்டேன்,"

"இல்லை ஸ்வாமி! இந்தப் பந்தம் எப்போதும் நமக்கு சொந்தமாயிருந்தால் போதும்!"

★

இந்த இன்ப உரையாடல்களை குடிசைக்குப் பின்புறமிருந்து கேட்டுக்கொண்டிருந்த மன்னன், சிறிய பலகணி வழியாக உள்ளே பார்த்தான். கோமேதகமும், அந்தத் துறவியும் 'உலக பந்தம்' எது வென' ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். அரசன் தனக்குத்தானே கேட்டுக்கொண்டான்- "யார் அந்தத் துறவி? யார் அந்தத் துறவி?" அரசனால் அங்கு நிற்க முடியவில்லை. குதிரையேறிப் பறந்தான்—மயக்கம் வந்து கீழே விழுந்துவிடுவான் போலிருந்தது- எப்படியோ அரண்மனை சேர்ந்தான்.

★

மறுநாள் விசாரணை— கோமேதகம் இழுத்து வரப்பட்டாள். ஒரு துறவியைக் கெடுத்துவிட்டாள் என்ற குற்றம் சாட்டப்பட்டாள். உடனே தீர்ப்பு வழங்கப்பட்டது. நெருப்புக் குண்டம் காத்திருந்தது அவளுக்காக!

"கடைசியாக ஏதாவது சொல்ல வேண்டியிருக்கிறதா?" என்று கேட்டான் ஒரு முரட்டு அதிகாரி.

"இல்லை!" என்று தலையசைத்தாள்.

இரண்டு வீரர்கள் அவளை ஒரு இரும்புக் கம்பியிலே கட்டினார்கள். கம்பியோடு தூக்கி, அவளைத் தணலில் எறிந்தார்கள். வெந்து கொண்டிருக்கும் போதே அவளை வெளியே எடுத்தார்கள். தீர்ப்பில் குறிப்பிட்டபடி மிளகாய்த் தூள் தூவப்பட்டது—கோமேதகம் துடித்தாள்— மத்தள, தாளங்கள் முழங்கின- வாய் திறக்காமல் தரையிலே உருண்டபடி புழுப் போலத் துடித்தாள்-சிறிது நேரம் மரணாவஸ்தை— மன்னன் எதிர்பார்த்தபடி நிர்வாண நடனம் நடைபெறவில்லை— விரைவிலேயே பிணமானாள். ஆழி நாட்டின் அரங்குகள் அனைத்திலும் அழகு தெளித்த அந்த அற்புத சுந்தரியின் ஆவி, துடிப்போடு நீங்கியது! உடல் அசைவால் உள்ளத்தை உருக்கிய அந்த ஒய்யாரியின் மேனி பயங்கரமாகக் காட்சி தந்தது! தீர்ப்பின் மூன்றாவது திட்டப்படி, அவளது சவம், பொது மேடைக்கு காட்சிக்காக எடுத்துச் செல்லப்பட்டது!

கோமேதகத்தின் சவ ஊர்வலத்தைக் காண நாட்டு மக்கள் அனைவரும் கூடினர். ஊர்வலம் நகர்ந்தது. தலைநகரின் மத்தியிலுள்ள மேடையிலே அவளது சவம் நாலு நாட்கள் தொங்க வேண்டுமல்லவா? அந்த மேடையை நோக்கி ஊர்வலம் புறப்பட்டது. மேடையை ஊர்வலம் அணுகியது. மக்கள் கடல் அந்த மேடையை உற்று நோக்கியது. அங்கே, கோமேதகத்திற்கு முன்பாக ஏதோ ஒரு உருவம் தொங்கிக் கொண்டிருந்தது.

"யாரோ ஒரு துறவி தூக்கு மாட்டிக் கொண்டிருக்கிறான் இந்த மேடையிலே" என்றனர் மக்கள். அதிகாரிகள் ஓடிப் போய்ப் பார்த்தனர். "இவன் துறவியல்ல" என்றனர்—துறவிக் கோலத்திலே இளவரசன் இன்பசாகரன் பிணமாகத் தொங்கிக் கொண்டிருந்தான்.

"வெளிநாட்டுப் பயணம் புறப்பட்ட இளவரசர் எப்போது துறவியானார்? ஐயகோ! இது என்ன புதுமை?" என்று மக்கள் அலறினர்.

துறவியின் மடியிலே ஒரு ஓலையிருந்தது. அதைக் கொண்டு போய் மன்னனிடம் கொடுத்தனர்.

"அப்பா! அனார்கலி கொல்லப்பட்ட பிறகும் உயிர் வாழ்ந்த அக்பர் மகன் சலீமல்ல நான்— வாழட்டும் — உங்கள் அக்கிரம அந்தஸ்தும், அதிகாரமும்!"

வணக்கம்,
இன்பசாகரன்.

மன்னன் மரமாக நின்றான். இளவரசனிடமிருந்து கோமேதகத்தை பிரிக்க எண்ணினான்- இருவருமே பிரிந்தனர்— ஏங்கினான்!

கோமேதகத்திற்கு தரப்பட்ட தண்டனையின் கொடுமைக்கு மக்கள் இப்போது காரணம் புரிந்து கொண்டனர்.

★

அந்த சுந்தரத் திருநாள்....

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

காராக்கிரகத்துக்கு அனுப்பப்பட்டோம்!

ஜூலை 14-பெண் மணிகள் தலைமையிலே பாரிஸ் மக்கள் மனித உரிமைப் பிரகடனத்திலே ஹாயியிடமிருந்து கையெழுத்து வாங்கினார்கள்!

இங்கே தோழியர் சத்யவாணி முத்து தலைமையிலே ஆச்சாரியாரை அவரது வீட்டிலே சந்தித்துப் பேசச் சென்ற வீரர்கள் கைதானார்கள்!

ஜூலை 14-பிரான்சிலே பாஸ்டில் தகர்ந்தது!

அன்றுதான் இங்கு ஆச்சாரியாரின் ஆணவம் நொறுங்கியது! வடநாட்டு ஆதிக்கம் ஆட்டம் கொடுத்தது! கொத்தவால் சாவடி மொழியிலே கொக்கரித்துக் கிடந்த ஆசிய ஜோதியின் அடங்கா நாவு அடங்கி ஒடுங்கியது!

ஜூலை 14-பிரான்சு மக்களின் தேசியத் திருவிழா! (Fete of the Federation) அன்று பிரான்சு முழுவதும் தோரணங்கள் தொங்கும்! தொல்லைகள் ஒழிந்த திருநாள் துவங்கும்!

1790-ம் ஆண்டிலே பாரிஸ் நகரத்திலே வாழ்ந்த சாமான்யர்கள் தாங்களாகவே முன்வந்து- நகரை இனமாகவே அலங்காரம் செய்து பாஸ்டில் உடைந்த முதலாண்டு விழாவைக் கொண்டாடினார்கள்!

அத்தகைய வீர விழா இன்று வந்திருக்கிறது. திராவிடத் தோழர்கள் அனைவரும் இன்றைய தினம் வெற்றி வாழ்த்துகளை பரிமாறிக்கொள்வோம்! ஃ

பிறைவானம்......

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

தாள். அப்புறம் சிரிக்க ஆரம்பித்து விட்டாள்! 'தன்னைப் போல் தன் மகனும் பால் வார்க்கச் சென்றிருக்கிறான், யாருமறியாமல். வழக்கம் போல் நல்லபாம்பு பாலைக் குடித்தது. அதோடு மட்டுமல்ல; எதிரேயே உட்கார்ந்திருந்த கண்மணியின் உயிரையும் குடித்து விட்டது!' இதை யூகித்துக் கொண்டாள் அம்மா! மீண்டும் சிரித்தாள். சிரித்துக் கொண்டேயிருந்தாள். அவள் பைத்தியக்காரியாகி விட்டாள்! இப்போது அந்த மாளிகை சூன்யமாகி விட்டது; பாழடைந்த பங்களாவாகக் கிடக்கிறது"

அண்ணா கதையை முடித்தார். "கண்மணி செத்தானே, அதற்கு யார் கற்பகம் காரணம்?" என்று கேட்டார்.

"யார் காரணம்?......ஆமாம் அண்ணா! நீ சொல்லியதுதான் சரி.
'மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம்; மற்றவர்
சொற்கேட்டல்இன்பம்செவிக்கு'
என்று குறளிலே படித்திருக்கிறேன், அண்ணா நான். தொட்டால் உடலுக்கும்—உதடசைந்தால் செவிக்கும்-இன்பம் தருவார்களாம், மழலைச் செல்வர்கள். அந்த சிட்டுக் குருவிகளை இப்படி எல்லாம் கொல்லுகிறார்களே— அப்பப்பா! பயங்கரம்! பயங்கரம்!! இப்போது புரிகிறதண்ணா, இவை எல்லாம் '**பக்தியால் நேரும் பயங்கரங்கள்**'தான்!" என்றது கற்பகம்!

—**சொர்ணம்**

கொள்கை வளருது கோபுரம் போலே!

மதுரை

17-7-55 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு, கீழமார்க்கெட், அண்ணா திடலில் மும்முனை போராட்ட நினைவு நாள் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் நாஞ்சில் மனோகரன், மதுரை முத்து—ஆகியோர் பேசுவர்.

குடந்தை

17-7-55 ஞாயிறு மாலை குடந்தை வெள்ளி விழா பூங்காவில் தோழர் எஸ். கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் மும்முனைப் போராட்ட நினைவு நாள் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, கே. கே. நீலமேகம்-ஆகியோர் பேசுவர்.

பெங்களூர்

போதுச் செயலாளருக்கு வரவேற்பு

17-7-55ஞாயிறு மாலை 6மணிக்கு சிக்கலால் பாக்கில், தோழர் ஏ. டி. பிரான்சிஸ் அவர்கள் தலைமையில், தோழர்கள் ஜெ. கனகசுந்தரம், நாவலர் இரா. நெடுஞ்செழியன் — ஆகியோர் பேசுவர். [பிற்பகல் 2-30 மணிக்கு சிராமபுரத்திலிருந்து மாபெரும் ஊர்வலம்புறப்படும்]

கோலார் தங்கவயல்

பொதுச் செயலாளருக்கு வரவேற்பு

19-7-55 செவ்வாய் மாலை 4 மணிக்கு, கே. ஜி. எப். உயர் நிலைப் பள்ளித் திடலில், தோழர் கே. ஜி. சின்னராசன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

வ. ஆ. மாவட்ட தி. மு. க. கூட்ட அழைப்பு.

24-7-55 மாலை 3 மணிக்கு திருவண்ணாமலை சாதுக்கள் சத்திரத்தில் வ. ஆ. மாவட்ட தி. மு. க. செயற்குழு கூட்டம் நடைபெறும். அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமென வ. ஆ. மாவட்டச் செயலாளர் தோழர் முல்லை-சத்தி அறிவிக்கிறார்.

ஆலோசனைக்குரிய தீர்மானங்கள்

1, மாநில மாநாட்டு நிதி.

2. பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், அறிஞர் அண்ணா சுற்றுப் பிரயாண திட்டம்.

செயலாளர் கொண்டு வரும் இதர தீர்மானங்கள்.

மாநில மாநாட்டு நிதிக்காக

தி. மு. கழக மாநில மாநாட்டு நிதிக்காக, எஸ். எஸ். ராசேந்திரன் நாடக மன்றத்தினரால் 'மணி மகுடம்' நாடகம், சேலம் விக்டோரியாவில் **17-7-55** மாலை **6-30**, இரவு **10-30** மணிக்கு (இரு நாடகங்கள்) நடைபெறும்.

★

பிறை வானம்

...பிள்ளைகள் பகுதி...

பயங்கரக் கதை!

"கற்பகம்! கற்பகம்!" என்று அழைத்துக் கொண்டே இல்லத்திற்குள் நுழைந்தார் அண்ணன். வழக்கமாக வாசலில் நின்று வரவேற்குமே தங்கை; இன்றுமட்டும் எங்கே போய்விட்டது? — என்று எண்ணிக்கொண்டே வீட்டிற்குள் பார்த்தார்.

ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தது கற்பகம். ஆனால், அதன் கண்கள் கலங்கியிருந்தன. எப்போதும் களிப்பும் சிரிப்பும் கூத்தாடும் அதன் முகத்தில் கவலை எப்படி வந்தது? அண்ணாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. "என்னம்மா? என்ன நடந்தது?" என்று பரிவுடன் கேட்டார்.

கற்பகம் தன் கையிலிருந்த தினசரி செய்தித் தாளை அவரிடம் நீட்டியது. குறிப்பிட்ட ஓரிடத்தைக் காட்டியது. அண்ணன் படித்தார். கற்பகத்திற்கு கவலையைத் தந்த செய்தியை நீங்களும் அறியவேண்டாமா? இதோ:

"ஒரு அபபா. மனிதன் தான். ஆனால மிருகம்கூட செய்யத் துணியாத காரியத்தைச் செய்துவிட்டான். தன் ஒரே மகளின்-ஏழு வயதுப் பாப்பாவின் தலையை வெட்டினானும். அதைக் காவடியிலே வைத்துக் கட்டினானும். குதித்தானும். கூத்தாடினானும். "ஹா...ஹா...ஹா..." என்று சிரித்தானும!"

"அப்பப்பா! என்ன கோரம்! இப்படியும் ஒரு மனிதனா? கடவுள் பெயரைச் சொல்லி, குழந்தையின் தலையை வெட்டிவிட்டானே!"— அண்ணா வாயைப் பிளந்தார்.

"ஆமாம் அண்ணா! இதைப் படித்தால் எப்படி அண்ணா அழுகை வராமலிருக்கும்? அந்த முட்டாளை-முரடனை-துரோகியை-மிருகத்தை-கொலைகாரனை-காட்டுமிராண்டியை என்னபாடு படுத்த வேண்டும் தெரியுமா?"—கற்பகம் பலமான 'அர்ச்சனை' செய்தது.

அண்ணா கீழே உட்கார்ந்தார். "ஒரு விதத்தில் அவன்மேல் குற்றமே சொல்லமுடியாது கற்பகம்!" என்றார் மெதுவாக.

"என்ன அண்ணா இப்படிப் பேசுகிறாய்?"

"இதெல்லாம் 'பக்தியால் நேரும் பயங்கரங்கள்!' இன்னொரு சம்பவம் சொல்கிறேன்; அப்புறம் நீயே புரிந்துகொள்வாய். கேள்" என்றார்.

கற்பகமும் பக்கத்தில் அமர்ந்தது.

"பண்ணை வீடு என்றால் அந்த ஊரில் — ஊரில் மட்டுமென்ன; அநேகமாக நாடு முழுவதுமே தெரியும். மூன்றடுக்கு மாளிகை—முகம் பார்க்கும் கண்ணாடியைப் போல் பளபளக்கும் பளிங்குச் சுவர்கள்—சுற்றிலும் அடர்ந்த தோட்டம் — இப்படிக் காட்சி தரும் பண்ணை வீடு. பார்ப்போர் வியப்பர். ஆனால் மறுகணம் முகத்தைச் சுளிப்பார்கள். "...ம்... கோட்டை மாதிரி வீடு — கொட்டிக் கிடக்கிறது பணம் — அனுபவிக்க ஆள் இல்லையே! என்ன பயன்?" இப்படி முணுமுணுப்பார்கள், அவர்கள்"

'ஏன்? என்ன காரணம்? அந்த வீட்டில் ஆளே இல்லையா?'-குறுக்கிட்டது கற்பகம்.

"இருந்தார்கள், பண்ணையரும், அவர் மனைவியும்! ஆனால், அவர்களுக்குக் குழந்தையே இல்லை. ரொம்பவும் வருந்தினார்கள். சொத்துகள் எல்லாம் வீணாகிவிடுமே என்றல்ல; "அப்பா! அம்மா!" என்றழைக்க ஒரு பிள்ளை இல்லையே என்ற ஏக்கம்தான்! இப்படியே நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன"

"அவர்களுக்கு குழந்தை பிறக்கவே இல்லையா, அண்ணா?"

"பிறந்தது. பல ஆண்டுகளுக்குப்பிறகு ஒரு பையன் பிறந்தான். கேட்க வேண்டுமா? அப்பப்பா! ஊரே அல்லோல கல்லோலப் பட்டது. விருந்தென்ன; வேடிக்கையென்ன-பண்ணை வீடு புதிய ஒளி பெற்றுவிட்டது. அம்மாவுக்குக் கொள்ளை மகிழ்ச்சி! அந்த மகிழ்ச்சி ஒருநாள் மண்ணாகப் போவது அவளுக்கு எப்படி அப்போது தெரியும்? விருந்துக்கு வந்திருந்த ஒரு கிழவி, அந்த அம்மாவிடம் வந்தாள். காதோடு என்னவோ சொன்னாள். "பெண்ணே! தோட்டத்தில் புதிதாக ஒரு பாம்புப் புற்று தோன்றுகிறது! நாகம் இருக்கிறது அதிலே! கொன்றுவிடாதீர்கள். தினம் தினம் பால் வார்த்து வா.உன் பாலகனுக்கு நல்லது" என்று சொன்னாள். 'நாகப் பாம்பு'என்றதும் பயந்துவிட்டாள் அம்மா. 'கொன்று விட்டால் என்ன?' என்று யோசித்தாள். பக்தி தலைகாட்டியது. பிள்ளைக்கு ஏதேனும் ஆபத்து வந்துவிடுமோ என்ற பயமும் எழும்பியது. முடிவை மாற்றிக்கொண்டாள். அன்றுமுதல் தினமும் புற்றுக்கருகில் சென்று பால் வார்க்க ஆரம்பித்தாள்."

"பைத்தியக்காரி அவள்"—கற்பகத்தின் குற்றச்சாட்டு இது.

"பைத்தியக்காரியாகத்தான் போய் விட்டாள், கற்பகம்! கேள். கண்மணி—அதுதான் அவன் பெயர்—வளர்ந்து கொண்டே வந்தான். ஐந்து வயது அவனுக்கு! அம்மாவும் ஐந்து வருஷமும் தினம் தவறாமல் நல்ல பாம்புக்கு பால் வைத்துக்கொண்டிருந்தாள். அம்மாவின் இந்த செய்கையை கவனித்துக் கொண்டேயிருந்தான் மகன்! 'வெள்ளிக் கிண்ணத்தில் பால் எடுத்துப் போகிறார்கள்-மண் மேட்டுக்கு அருகில் வைக்கிறார்கள்—திரும்புகிறார்கள் — சற்று நேரம் சென்று போனால் கிண்ணம் காலி! என்ன இது: ஒரே புதுமை!' என்று யோசித்தான். பாவம், அந்த யோசனை ஆபத்தானது என்பது அந்தச் சிறுவனுக்கு எப்படித் தெரியும்?

"அன்று அம்மா வழக்கம்போல் படுக்கையை விட்டு எழுந்தாள். பக்கத்தில் பார்த்தாள். படுக்கையிலிருந்த மகனைக் காணோம். "கண்மணி! கண்மணி!" என்று அழைத்தாள். அம்மாவின் குரல் எங்கிருந்து கேட்டாலும், "வந்துத்தேம்மா!" என்று ஓடி வருவான் கண்மணி. ஆனால், அன்று மட்டும்...? அம்மாவின் அழைப்பு வீணானது. அம்மா எழுந்தாள். தேடினாள். பலனில்லை. அம்மாவுக்கு ஒரே பதட்டம்—பயம்! "கண்மணி! கண்மணி!" என்று கத்தினாள். திடீரென்று அவள் கண்கள் பக்கத்திலிருந்த மேடையைக் கவனித்தன. அங்கே எப்போதும் இருக்கும் 'ஒன்றை'க் காணோம்! அம்மா விழித்தாள். அங்கே இருக்க வேண்டிய வெள்ளிப் பால் கிண்ணம் எங்கே? மின்வெட்டு நேரத்தில் அம்மாவின் மனதில் என்னவோ தோன்றியது தோட்டத்தை நோக்கிப் பாய்ந்தாள். பாம்புப் புற்றை நோக்கி ஓடினாள்!"

"ஏன் அண்ணா?..."

"குறுக்கே பேசாமல் கேள், கற்பகம்! மிரண்ட கண்கள்—படபடக்கும் நெஞ்சு — இப்படி, அம்மா புற்றை நெருங்கினாள். "ஆ" என்று கூச்சலிட்டாள். ஆமாம்: அவள் எண்ணியது வீண் போகவில்லை. புற்றடியில் வெள்ளிக் கிண்ணம்! உருண்டு கிடந்தது, காலியாக! ஆனால் எங்கே கண்மணி? "கண்மணி"— அம்மா அலறினாள். அரண்ட கண்கள் இங்கு மங்கும் அலைந்தன. என்ன இது? புற்றுக் கருகிலே செடிகள் முறிந்து கிடந்தன. பூக்கள் கசங்கிக் கிடந்தன. மாடு புகுந்து அழித்ததைப் போல் தோன்றுகிறதே! அம்மா அதை கவனித்தாள். கவனித்துக் கொண்டே போனாள். செடிகளின் சிதைவு ஓரிடத்தில் முடிவுற்றது. முடிந்த இடத்தில்—அந்த அடர்ந்த இடத்தில் அவள் கண்கள் பாய்ந்தன. மறுகணம் 'ஐயோ, கண்மணி! என் மகனே!' என்று கத்தினாள். அவள் கதறல் மாளிகைச் சுவற்றில் மோதி எதிரொலித்தது!"

"அந்தப் புதரில் என்ன அண்ணா?"

"கண்மணி கிடந்தான் கற்பகம்! இல்லை; இல்லை: கண்மணியின் உடல் கிடந்தது! நீலம் பாய்ந்து கிடந்த அவனது பஞ்சு உடலைத் தூக்கினாள் அம்மா! அழுதாள். புலம்பினாள். அழுது கொண்டேயிருந்தாள். புலம்பிக் கொண்டேயிருந்

○ தொடர்ச்சி 10-ம் பக்கம்

வெற்றி வீரன்

உச்சி வெயில் - கடுமையான வெப்பம்-அதைப் பொருட்படுத்தாது "ஐஸ்;ஐஸ்" என்று கூவிக் கொண்டு செல்கிறார்களே சிறுவர்கள், அவர்களைப் பார்த்தால் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? 'கொதிக்கும் தார் ரோட்டில் எப்படித்தான் செருப்பில்லாமல் நடக்கிறானோ?' என்று பரிதாபப் படுவீர்கள் சிலர். ஆனால் சிலரது நெஞ்சிலோ, அந்த இரக்கமே தோன்றாது. "ஏய், ஐஸ் விற்கிறவனே! வாடா இங்கே" என்று அதட்டுவார்கள்; அலட்சியமாக அழைப்பார்கள். பாவம், அவர்களுக்கு என்ன தெரியும், அந்த ஏழைச் சிறுவனின் உள்ளத்தில் முடங்கிக் கிடக்கும் எண்ணங்களைப் பற்றி—எங்கேயோ மறைந்து கிடக்கும் அவனது எழுச்சி மிக்க எதிர்காலத்தைப் பற்றி! ஆமாம்; "நான் யார்? எனக்குள்ள திறமை என்ன? என்னால் என்ன என்ன செய்ய முடியும்?" என்று அந்தத் தம்பி சிந்தித்துப் பார்ப்பானேயானால், உண்மையிலேயே அவன் எதிர்காலம் சிறப்பாகத்தான் இருக்கும். தவறு என்கிறீர்களா? இதோ, தம்பி ஒருவனைக் கண்முன்னே காணுங்கள். அப்புறம் சொல்லுங்கள்.

அதோ, ஒரு சிறுவன். நடுத்தெருவிலே அலைகிறான். பரட்டைத்தலை-பஞ்சடைந்த கண்கள்-அவன் ஏழை! பின் பணக்காரன் வீட்டுப் பையனா பிச்சைக்காரனைப்போல் தோன்றுவான்? அவன் கையிலே ஏதோ தொங்குகிறது. புத்தகப் பை இல்லை; ஒரு பெயிண்ட் வாளி! இன்னொரு கையிலே பிரஷ் இருக்கிறது! ஆமாம். வர்ணம் அடிப்பதுதான் அவன் தொழில்! தெருவிலே கூவிக் கூவித் திரிவான். தேவை உள்ளவர்கள் அழைப்பார்கள். சிறுகூலி கிடைக்கும். அவன் வயிறு நிரம்பும். இப்படி ஓடிக்கொண்டிருந்தது அவன் வாழ்க்கை. ஆனால், அவன் முகத்திலே மகிழ்ச்சியில்லை-தெளிவு இல்லை. எப்போதும் யோசித்துக் கொண்டே இருப்பான். 'நான் யார்? என் திறமை என்ன? நான் பெயிண்ட் அடித்தே காலம் ஓட்ட வேண்டுமா?" —இப்படி எல்லாம் யோசிப்பான். பைத்தியக்காரத்தனம் என்று எண்ணிவிடாதீர்கள். அந்த யோசனைதான் அவனை பெரிய வீரனாக்கியது! முடிவில் நாட்டாசை பிடித்த அவன், பரிதாபமாகச் செத்தான். ஆனாலும், முயற்சியால் வளர்ந்த அவன் யார்?

[illegible]

'எழுத்தாணி'

ராசரத்தினம். சீர்காழி

(?) 3-7-55 'ஜனசக்தி' இதழில் 'ஈட்டி முனை' என்ற பகுதியில். "முரசொலியின் கலவறையும்." என்ற ஒரு தலைப்பு கண்டேன். அதன் பொருள் யாதோ?

தவறாக எண்ணாதீர். மூளைக் குழப்பம் ஏற்பட்டால் மொழிக் குழப்பமும் ஏற்படுகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு!

கேசவன், திருச்செங்கோடு.

(?) நேருவின் வெளி நாட்டுக் கொள்கை எதைப் போன்றது?

மேனகாவின் சாகசம் போன்றது. விஸ்வாமித்திர வேஷமிட்ட இந்தியக் கம்யூனிஸ்டுகளே மயங்கிவிட்டார்கள் அல்லவா?

சிவப்பிரகாசம், திருவண்ணாமலை.

(?) தி. மு. கழகத்தின் வாரிசு எது?

விடுதலை பெற்ற திராவிட நாடு.

ப. விசயராயன், வெங்கம்பூர்.

(?) மனிதனுக்கு எப்போது திருட்டுக் குணம் ஏற்படுகிறது?

சமுதாயம் இருட்டில் இருக்கும் போது!

இளம்பரிதி; காவலகுடி.

(?) 'ஆனந்த விகடன்' 26-5-55 இதழ் 'சித்திர ராமாயண'ப் பகுதியில், இராவணனைப் பூணூலுடன் படம் போட்டிருக்கிறார்களே, இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

இது ஒன்றும் வியப்பில்லையே! இப்போதிருக்கும் காமராசருக்கே பூணூல் மாட்டியவர்கள், அப்போதிருந்த இராவணனையா சும்மா வைப்பார்கள்?

ஏஜண்டுகள் தேவை.

அழகிய காலண்டர்களுக்கு ஆர்டர்கள் எடுக்க ஏஜண்டுகள் தேவை.

ரூ 15 முன்பணம் அனுப்பினால் ஆல்பம் வகையறா அனுப்பப்படும். மூன்று ஆர்டர்கள் வாங்கிக் கொடுத்தபின், அந்த 15 ரூபாய் திருப்பித் தரப்படும்.

விபரங்களுக்கு:

நாதன் - கம்பெனி,

[காலண்டர் தயாரிப்பாளர்கள்]

திருச்சிராப்பள்ளி.

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்;

(●) ஐ. கான்,
9-54, சாலை நகர்.
இளையாங்குடி.
(இராமநாதபுரம்மாவட்டம்)

சந்திரன்; கோலார்.

(?) உண்மை சோஷலிசத்திற்கும், ஆவடி—பிரஜா சோஷலிசங்களுக்கும் உள்ள வேற்றுமை என்ன?

'மறம்' என்பதற்கும், 'மரம்' என்பதற்கும் உள்ள வேற்றுமையைப போல பெரிது; மிக மிகப் பெரிது!

வெற்றிவேல், சுந்தராபுரம்

(?) நடராசர் கும்பாபிஷேகத்தில் இரண்டு லக்ஷம் பேர் கூடினார்கள் என்று 'மெயில்' பத்திரிகை வெளியிட்டது. தி மு. க. நடத்த இருக்கும் மாநில மாநாட்டில் அதற்கு மேலாகவா மக்கள் தொகை கூடுமென்று எதிர்பார்க்கிறீர்கள்?

அதைவிடக் குறைவாகக் கூடினாலும் உண்மையான மக்களே கூடுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

கண்ணன்; சென்னை-17.

(?) 'சக்கரவர்த்தித் திருமகனு'க்குப் பின் ஆச்சாரியார் தமிழ் நாட்டுச் சரித்திரத்தை எழுதுவாரா?

எழுதமாட்டார்—அவருக்கு முன்பாகவே அவரைச் சார்ந்தவர்கள் தமிழகத்து வரலாற்றிலே செய்ய முடிந்ததையெல்லாம் செய்து முடித்துவிட்டார்கள்—இவருக்கு பாக்கி வைக்கவில்லை!

ராசு; சிந்தாலகுப்பம்.

(?) தி. மு. க. வெறும் 'சோடா கியாஸ்' என்று ஒரு காங்கிரஸ் தோழர் கேலி செய்கிறார். உங்கள் கருத்து யாது?

அந்த 'சோடா கியாஸ்'தான் தென்னகத்தின் வயிற்று நோவுக்கு வகையான மருந்து என்று அவரிடம் கூறுங்கள்!

து. மு. அரசு, அரியலூர்.

(?) சிதம்பரத்தில் அதிக அளவு ஆஸ்திகர்கள் கலந்து கொண்டதானது, நாஸ்திகம் செத்து விட்டது என்பதின் அறிகுறியென்று குன்றக்குடியார் கூறுகிறாரே; அதுபற்றித் தங்கள் கருத்தென்ன?

கிரஹணம் வருவதால் சூரியனே அழிந்துவிடும் என்று ஒரு 'புத்திசாலி' கனவு கண்டாராம். அவருடைய அண்ணன்தான் அடிகளார்!

ப. சந்திரசேகரன், அமைந்தகரை.

(?) அதிக செலவு செய்தும் ஆகாத காரியம் எது?

செத்த பிறகு சிவலோகம் போவதுதான்!

வசனப்பிரியன், கோட்டூர்.

(?) கவர்னர் எதற்காக நியமிக்கப் படுகிறார்?

கல் நாட்டு விழா நடத்தவும், திறப்பு விழாக்களில் ரிப்பன்களைக் கத்தரிக்கவும் நியமிக்கப் படுகிறார்.

(●) ஐ. கான், இளையான்குடி.

(?) 'டாரா'த்தில் வாழ்வது யார்? ஆள்வது யார்?

"திருதராஷ்டிரர்"கள் ஆளுகிறார்கள்— 'பீமன்'கள் வாழ்கிறார்கள்.

வி. ஆர். தண்டபாணி,
வண்டிப்பாளையம்.

(?) காலம், யாருக்குப் பாடம் புகட்டும்? யாருக்குப் பாராட்டுரை வழங்கும்?

முறையே, துரோகிகளுக்கும்—தூயவர்களுக்கும்!

மா. தாமரைச்செல்வன், சமயபுரம்.

(?) உலகில், அறிவின் அடிப்படையில் வளர்ந்து வரும் இயக்கங்களில் முதன்மையானது எது?

சொன்னால் தற்பெருமை என்பீர்கள்— சொல்லாமலுமிருக்க முடியவில்லை — சுயமரியாதை இயக்கம்தான்!

தர்மலிங்கம்; தியாகராயநகர்.

(?) கலைவாணர் வீட்டுக் கல்யாணத்தில் பேசிய திருக்குறள் முனிசாமி, ஜவகர்லால் நேரு குறள் வழி நடப்பவர் என்றும், குறளில் கூறியது போல கோபத்தை அடக்கும் பண்புள்ளவர் என்றும் குறிப்பிட்டாரே: அது சரியா?

நேரு கோபத்தை அடக்குவாரோ என்னமோ நமக்குக் கவலையில்லை; "யாகாவாராயினும் நாகாக்க!" என்ற குறளை மறந்து "நான்சென்ஸ், காட்டுமிராண்டி" என்றெல்லாம் நம்மினத்தாரை அவர் திட்டினார் என்பதை நாம் மறக்கவில்லை. குறளாரும் மறந்திருக்க மாட்டார்.

கந்தசாமி; வேலூர்.

(?) 'தி. மு. கழகத்தில் திட்டமில்லை— அதனால் வெளியேறிவிட்டோம்' என்கிறார்களே, புது காங்கிரஸ்காரர்கள்— உண்மை தானா?

ஆமாம். வசூல் செய்த பணத்தை வாயில் போட்டுக் கொள்ள திட்டமில்லைதான்!

ஜிப்பியுடன் பேட்டி கண்ட பகுதி மிகவும் நன்றாயிருந்தது. கற்பனை நிருபருக்கு எனது மனமார்ந்த நன்றி.

—இரா. கிருட்டிணமூர்த்தி,
தோட்டக்குறிச்சி.

நாட்டிய கலாராணியின் தண்டனையை நேரில் காணும் திரைஓவியமாக தீட்டியிருப்பது ஆசிரியரின் செல்வ நடைக்கு சிகரம்.

—க. நெடுஞ்சோழன்,
திருப்பத்தூர்.

"முரசொலி" இதழை அதிகப் பக்கங்களுடன் புத்தக வடிவில் வெளியிடுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

—பி. எஸ். மூர்த்தி,
கீழப்பட்டமுடையார்புரம்.

"நில் நண்பா; எங்கே ஓடுகிறாய்?" என்ற பகுதிக்கு ஈடு இணையே கிடையாது.

—சி. மு. மு. ஞானபண்டிதன்,
தேவகோட்டை.

பொன்முடியின் கடிதம் படித்தேன். வழுக்கி விழுந்தவன் வாய்மை கூறுவது போல் புலம்பாமல், மாஜி கவர்னர் ஜெனரல் இனியாவது மௌனம் சாதிப்பாரா?

—அருள்தாசன்,
பண்டாரவாடை.

"நில் நண்பா! எங்கே ஓடுகிறாய்?" என் உள்ளத்தையே தொட்டுவிட்டது. 'தலை கொடுப்போர்' உள்ளத்தைக் கூடத் தூண்டியிருக்கும்!

—இ. கமால்தீன்,
சென்னை-1.

நான் "திரும்பிப் பார்" பகுதியை வாரந் தவறாது காண ஆசைப்படுகிறேன்.

—திராவிடப் பித்தன்,
சென்னை-1.

ஜிப்பியின் மூலம் செப்பியிருக்கும் கருத்துக்கள் சொல் அழகு மட்டுமல்ல; கருத்தழகும் கொண்டுள்ளது.

—எ. தியாகஅரசு,
பழனி.

'முரசொலி'

இலங்கைத் தோழர்களுக்கு

ஆண்டு சந்தா	6-0-0
6-மாத சந்தா	3-8-0

இலங்கை நேயர்களிடமிருந்து வி. பி. பி. மூலம் சந்தா தொகை பெற்றுக் கொள்ள இயலும்.

வெளிநாடு

ஆண்டு சந்தா	7-0-0
ஆறுமாத சந்தா	4-0-0

மலேயா நேயர்கள், சந்தா தொகைக்கு 'கிராஸ்' செய்த பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் அனுப்ப வேண்டுகிறோம்.

மூன்று மாத சந்தா கிடையாது.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.